




# தினப்புயல்

THINAPPUYAL

REGISTERED AS A NEWS PAPER AT THE DEP. of . N.A :- RBN/4/3/06







மலர்-01 Tel&Fax:- 0242227558, Hot line: 0711850885. Email:thinappuyal2014@gmail.com, www.thinappuyalnews.com இதழ் -299



## தம்பி பிரபாகரனின் ஆயுத போராட்டம் சரியானது– சி.வி. விக்னேஸ்வரன்

## எம்.ஏ சுமந்திரன் ஒரு சுத்துமாத்து பேர்வழி–பனங்கொட்டையான்

## இனவாதம் மதவாதம் தேசியவாதத்தை கையாளும் கோட்டா தனக்குத் தானே வாய்க்கரிசி போடப்போகிறாரா?

-இது தமிழ் பேசும் மக்களின் இதயத்துடிப்பு-

# இனவாதம் மதவாதம் தேசியவாதத்தை கையாளும் கோட்டா தனக்குத் தானே வாய்க்கரிசி போடப்போகிறாரா?

நிலைமாறு கால அரசியல் காலம் என்பது காலத்திற்கு காலம் வேறுபட்டது. போர் உச்சம்பெற்ற காலப்பகுதிகளில் தமிழ் மக்கள் கண்டிராத இழப்பை மீண்டும் ஏற்படுத்தும் ஒரு சூழல் ஏற்படுத்தப்படுமாக இருந்தால் அதன் விளைவு ஜனாதிபதி கோட்டபாயவின் அரசியல் கூட்டத்திற்கே வாய்க்கரிசி போடுகின்ற ஒரு சூழல் உருவாக்கப்படும். இன்றைய அரசியல் சூழ்நிலை சாதகமாக பயன்படுத்தப்பட வேண்டும். தற்போதைய காலகட்டத்தில் ஜனாதிபதியினுடைய இனவாத கருத்துக்கள் முரணான செயற்பாடுகளை தோற்றுவித்துள்ளன. குறிப்பாக இராணுவ அதிகாரிகளுக்கு அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட உயர் பதவியானது இலங்கைக்கும் சர்வதேச சமூகத்திற்கும் பேச்சளவிலான நல்லிணக்கம் கூட இல்லை என்று செய்தியினையே சொல்லி நிற்கின்றது. இதனை உண்மைக்கும் நீதிக்குமான சர்வதேச அமைப்பு பணிப்பாளர் ஜஸ்மின் சூக்கா தெரிவித்துள்ளார்.

இராணுவ அதிகாரிகளுக்குரிய பதிவிகளை வழங்கி நின்ற அரசாங்கத்தினுடைய செயற்பாடானது அரசியலை அடிப்படையாக கொண்டதென்றும் இலங்கை அரசியலுக்கும் சர்வதேச சமூகத்திற்கும் பேச்சளவிலான நல்லிணக்கம் கூட இல்லையென்ற செய்தியினையே சுட்டிக்காட்டுகிறது. அதுமட்டுமன்றி தமிழ் தேசிய கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்மந்தன், மாவை சேனாதிராஜா போன்றவர்களும் ஜனாதிபதியின் உரைக்கு தமது அதிருப்தியை வெளியிட்டுள்ளனர். குறிப்பாக தொல்பொருள் முக்கியத்துவம் வாய்ந்த இடங்களை பாதுகாப்பதற்கான செயலணி ஒன்றை உருவாக்கி கிழக்கு மாகாணத்தில் அதனை பாதுகாப்பதற்கான முக்கியத்துவம் வாய்ந்த இடங்களை மதிப்பீடு செய்வதென பௌத்த மகா சங்கத்திடம் ஜனாதிபதி கூறியிருப்பதாவது தமிழ் மக்கள் மத்தியிலும் மீண்டும் ஒரு நில ஆக்கிரமிப்பை ஏற்படுத்தப்போகின்ற ஒரு செயற்பாட்டையே எடுத்துக்காட்டுகின்றது. முற்றிலும் அனைத்து தரப்பிலும் இராணுவ மயமாக்கலை முடக்கிவிட்டு தற்போதைய காலகட்டத்தில் தனது செயற்பாடுகளை முன் நகர்த்தி செல்வது என்பது தமிழ் மக்களுக்கு எதிரான மற்றுமொரு பாரிய இனப்படுகொலைக்கு அரசு தயாராகின்றது என்றே கூற வேண்டும். குறிப்பாக அரசியல்வாதிகள் அரசியல் தலைமைகளுடைய நேரடி கருத்தின்படி அவர்மீது பல்வேறு குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

ஐ.நா. மனித உரிமைகள் சபையினுடான பொறுப்புக்கூறல் முன்னெடுப்புக்கள் இதுவரையில் தோல்வியடைந்துள்ள நிலையில் இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் பாரப்படுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். ஐ. நா. மனித உரிமைகள் சபையை இலங்கை அரசாங்கம் முற்றாக ஏமாற்றி உதாசீனம் செய்துள்ள நிலையில் ஐ.நா பொதுச் சபையில் இருந்து இலங்கையின் உறுப்புரிமையை இரத்து செய்வதற்கு சர்வதேச சமூகம் நடவடிக்கை எடுக்க வேண்டும்' என்று கூறியிருந்தேன்.'

இந்நிலைமை மிக விரைவில் ஏற்படப்போகின்றது என்று நினைத்தாரோ என்னவோ ஜனாதிபதி கோட்டபய ராஜபக்ச கடந்த 19ஆம் திகதி நடைபெற்ற யுத்த வெற்றிவிழா கொண்டாட்டத்தில் எமது நாட்டுக்கு அநீதியான வகையில் ஏதேனும் ஒரு சர்வதேச நிறுவனம் அல்லது சர்வதேச அமைப்பு தொடர்ந்தும் செயற்படுமாக இருந்தால், அந்த நிறுவனத்தின் அல்லது அமைப்பின் உறுப்புரிமையிலிருந்து இலங்கையை விலக்கிக்கொள்ள நான் ஒரு போதும் பின்நிற்கப் போவதில்லை' என்று கூறியுள்ளார்.

எனவே, இலங்கை குற்றம் புரிந்து கொண்டிருப்பதை உலகம் அறிந்துள்ளது என்று கண்டே வீராப்பாகக் கதைக்கத் தொடங்கியுள்ளார் என்று புலப்படுகிறது. வரப் போவதைத் தடுக்க அவருக்கு வேறு வழி தெரியவில்லை போலும்.

அவர் ஆற்றிய உரை போர்க் குற்றவாளிகளைக் காப்பாற்ற எத்தகைய துன்பத்துக்குள்ளும் இலங்கையை கொண்டு போக அவர் துணிந்துவிட்டார் என்பதை எடுத்துக் காட்டுகின்றது. முள்ளிவாய்க்கால் இறுதிக் கட்டத்தில் அப்பாவித் தமிழ் மக்கள் சம்பந்தமாக இடப்பட்ட கட்டளை பீல்ட் மார்ஷல் பொன்சேகா அவர்களால் இடப்பட்டிருந்தால் இவ்வாறான வீராப்பு வெளிவந்திருக்குமோ தெரியாது.

யுத்த வெற்றிவிழா கொண்டாட்டத்தில் ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ச ஆற்றியுள்ள உரை வரலாற்றின் அடிப்படையில் புரையோடிப்போயிருக்கும் இந்த நாட்டின் இன முரண்பாட்டை கிஞ்சித்தும் கவனத்தில் எடுக்காமல் அலட்சியம் செய்து, வெற்றிக் கோஷம் எழுப்பி, படையினருக்கு எதிராகச் செயற்பட்டால் சர்வதேச நிறுவனங்களில் இருந்து வெளியேற போகிறார் என எச்சரிக்கை செய்துள்ளமை எத்தகைய ஒரு துன்பத்துக்குள் இலங்கை எதிர்காலத்தில் சிக்கி தவிக்கப்போகின்றது என்பதையே காட்டுகின்றது.

ஆனால் போர்க் குற்றவாளிகளே இன்றைய இலங்கையின் ஆட்சியாளர்கள். அவர்கள் தம்மை பாதுகாத்துக் கொள்வதற்காக இனவாதத்தையும் போலி தேசியவாதத்தையும் மூலோபாயமாகப் பயன்படுத்தி வருவதன் ஒரு எதிரொலி தான் இது. இந்த சிந்தனையுடன் செயற்படும் அவர்களால் ஒருபோதும் நாட்டைப்பற்றிச் சிந்தித்து வளமான ஒரு நாட்டை தூர நோக்க சிந்தனையுடன் ஏற்படுத்திக் கொடுக்க முடியாது. அத்தகையவர்களிடமிருந்து இவ்வாறான கருத்துக்கள் வெளிவருவதில் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமேயில்லை. பாதிக்கப்பட்ட நாம் கூட இலங்கையை சர்வதேசத்திலிருந்து தனிமைப் படுத்துவதனூடாக சர்வதேச யுத்தக் குற்ற விசாரணைக்கான அழுத்தங்களை ஏற்படுத்த முடியும் என்ற அடிப்படையிலேயே அழுத்தங்களை பிரயோகித்து வருகின்றோம்.

அதனால்தான் இலங்கையை ஐ. நா உறுப்புரிமையில் இருந்து நீக்கும்படி சர்வதேச சமூகம் மற்றும் ஐ.நாவை நான் வலியுறுத்தி வருகின்றேன். ஆனால் இலங்கையை சர்வதேச அரங்கில் இருந்து தனிமைப்படுத்துமாறு நாம் கோரும் நிகழ்ச்சி நிரலுக்கும் அரசாங்கம் சர்வதேச அமைப்புக்களில் இருந்து விலக நேரிடும் என்று விடுத்துள்ள எச்சரிக்கையின் பின்னால் இருக்கக்கூடிய நிகழ்ச்சி நிரலுக்கும் இடையில் பெரும் வித்தியாசம் இருக்கிறது.

எமது மக்களுக்கு எதிராக நிகழ்த்தப்பட்ட இனப்படுகொலைக்கு நீதியை பெற்று அதன் மூலம் ஒரு நிலையான சமாதானத்தை இலங்கையில் ஏற்படுத்த நாம் முயற்சிக்கிறோம். ஆனால், தாம் நிகழ்த்திய இனப்படுகொலையில் இருந்து தப்புவதற்கும் தொடர்ந்தும் எமக்கு எதிராக கட்டமைப்பு சார் இனப்படுகொலையை நிகழ்த்துவதற்கும் அரசாங்கம் முயலுகின்றது.

சர்வதேச அமைப்புகள் மற்றும் மனித உரிமை கடப்பாடுகளில் இருந்து விலகுவதன் மூலம் இவற்றை அடையலாம் என்பது ஆட்சியாளர்களின் எதிர்பார்ப்பு. சர்வதேச அமைப்புகளிலிருந்து விலக நேரிடும் என்று அரசாங்கம் அறிவித்துள்ளமை 2008 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் கடும் யுத்தம் நடைபெற்றுக்கொண்டிருந்த போது சர்வதேச அமைப்புகள் மற்றும் மனிதாபிமான அமைப்புகளை வன்னியில் இருந்து வெளியேறுமாறு அரசாங்கம் பணித்தமை



நினைவுக்கு வருகின்றது. சர்வதேச அமைப்புகளை வன்னியில் இருந்து வெளியேற்றிவிட்டு சாட்சி இல்லா யுத்தம் ஒன்றை நடத்தி எமது மக்களை அரசாங்கம் இன அழிப்புக்கு உள்ளாக்கியது. அரசாங்கம், அப்போது சர்வதேச அமைப்புகளை வன்னியில் இருந்து வெளியேற்றிய போது பாரிய மனித உரிமை மீறல்கள் இடம்பெறும் என்று எச்சரிக்கை விடுக்கப்பட்டிருந்த போதிலும் ஐ. நா மற்றும் சர்வதேச சமூகம் ஆகியவை Responsibility to Protect (R2P) கோட்பாடுகளுக்கு அமைவாக உரிய முன் ஏற்பாட்டு நடவடிக்கைகளை மேற்கொள்ளாமையே இன அழிப்பு நடைபெறுவதற்கு வழி கோரியது.

இன அழிப்பின் பின்னரும் தமிழ் மக்கள் தமது உரிமைகளுக்காக தொடர்ந்து போராடிவரும் நிலையில், எதிர்காலத்தில் மிக மோசமான கட்டமைப்பு சார் இனப்படுகொலை ஒன்றும் ஏனைய மனித உரிமை மீறல்களும் தமிழ் மக்களுக்கு எதிராக இடம்பெறப்போகிறது என்பதற்கான ஒரு முன் அறிகுறியாகக் கூட ஜனாதிபதி கோட்டபய ராஜபக்சவின் போர் வெற்றிநாள் அறிவிப்புக்கள் இருந்திருக்கலாம் என்று தோன்றுகிறது.

எனவே, முன்னர் போல அல்லாமல் ஐ. நா. மற்றும் சர்வதேச சமூகம் இந்த அறிவிப்பு குறித்து தீவிரமான கவனம் செலுத்த வேண்டும். இதனை அலட்சியம் செய்யாமல் தமிழ் மக்களை பாதுகாக்கும் முன் ஏற்பாட்டு நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும்.

அதேவேளை, நடைபெற்ற இனப்படுகொலையை சர்வதேச ரீதியில் சுயாதீனமாக விசாரணை செய்வதற்கும் காலம் தாழ்த்தாமல் நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். சர்வதேச சுயாதீன விசாரணை ஒன்று நடைபெறுமானால் எமது அப்பாவி சிங்களச் சகோதரர்களுக்கு இறுதி யுத்தத்தில் என்ன நடந்தது என்பதை உணர்த்தி அவர்களின் பௌத்த தர்மம் காட்டும் வழியில் எமக்கான பரிகார நீதியை பெற்று இணைந்த வடக்கு - கிழக்கில் சுய நிர்ணய உரிமையின் அடிப்படையில் தீர்வு ஒன்றினை காணமுடியும் என்று நம்புகின்றேன். இதன் மூலம், சுபீட்சமான இலங்கையை கட்டியெழுப்பலாம்.

ஆனால், எமது சில சிங்களச் சகோதரர்கள் நாம் தனிநாட்டை உருவாக்க எத்தணித்து வருகிறோம் என போலி குற்றச்சாட்டுக்களை முன்வைத்து வருகின்றனர். உண்மையில் சிங்கள ஆட்சியாளர்களே வட-கிழக்குக்கு ஒன்றும் தெற்குக்கு ஒன்றுமாக இரு வேறு ஆட்சி நிர்வாகங்களை நடத்தி வருகின்றனர்.

சில தினங்களுக்கு முன்னர் வட - கிழக்கில் முன்னெடுக்கப்பட்ட முள்ளிவாய்க்கால் நினைவு தினத்துக்கும் தெற்கில் நடைபெற்ற போர் வெற்றி தினத்துக்கும் இடையேயான முரண் நிலையினூடாக தெட்டத் தெளிவாக இதனை புரிந்துகொள்ளலாம்.

தெற்கில் இரண்டு தடவைகள் இளைஞர் கிளர்ச்சிகள் நடைபெற்றிருப்பதுடன் இராணுவத்தினால் மூர்க்கத்தனமாக கொடூரமான முறையில் பல்லாயிரம் இளைஞர்கள் கொலை செய்யப்பட்டு அவை முடிவுக்கு கொண்டுவரப்பட்டன.

இதன்போது உயிர்நீத்த இளைஞர்கள் இன்றுவரை வருடாவருடம் தென் இலங்கையில் நினைவு கூறப்படுகின்றார்கள். ஆனால், போர் வெற்றி விழாக்கள் நடைபெறுவதில்லை. ஆனால், தமிழ் மக்களின் யுத்தத்தை பொறுத்தவரையில், நினைவு கூறல் நிகழ்வுகள் தடுக்கப்படுவதுடன் யுத்த வெற்றி விழா தென் இலங்கையில் அதே காலகட்டத்தில் கொண்டாடப்படுகின்றது.

நீதித்துறையின் சட்டம் கூட இரு வேறாக தென் இலங்கைக்கும் வடக்கு கிழக்குக்கும் பிரயோகிக்கப்படுகின்றது. நினைவு கூறல் நிகழ்வுகளில் கலந்து கொண்டவர்கள் மீது கொரோனா தனிமைப்படுத்தல் விதிமுறைகள் பாய்கின்றன. ஆனால், தென் இலங்கையில் யுத்த வெற்றி விழா கொண்டாடுபவர்கள் மீது எந்த சட்டமும் பாய்வதில்லை.

எனவே, இலங்கைத் தீவை இரண்டாக பிரிக்கும் வகையில் உண்மையாகவே செயற்படுவது யார் என்று கேள்வி கேட்க விரும்புகிறேன். என்றும் குறித்த ஒரு அரசியல்வாதி தினப்புயல் ஊடக நிறுவனத்திற்கு தெரிவித்தார்.

தொடர்ந்தும் இவ்வாறான ஒரு நடவடிக்கையில் இருந்து அரசாங்கம் தமது நிலைப்பாட்டை மாற்றிக்கொள்ள வேண்டும் என்பதே அனைத்து தமிழ் அரசியல் தலைமைகளினதும் வேண்டுகோளாக இருக்கிறது. தவறு எங்கே நடக்கிறது என்பதை அரசாங்கம் தெரிந்துகொள்து அவசியம். பௌத்த தேரர்களுடைய அண்மைக்கால கொள்கைகளுடனான அரசியல் செயற்பாடுகள் மக்கள் மத்தியில் பெரும் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது. 65610 சதுர கிலோமீற்றர் பரப்பை கொண்ட இந்த நாட்டில் மூவின மக்களும் வாழுகின்றார்கள். அதனை கருத்தில் கொண்டு அரசாங்கம் இலங்கையில் ஒரு நிலையான சமாதானத்தை உருவாக்கும் வகையில் செயற்படுத்திக்கொள்வது காலத்தின் தேவையாகும்.

-இரணியன்-

தினப்புயல்
ஆசிரியர்பீடம்
இல:154 6வது ஒழுங்கை,
தேக்கவத்தை, வவுனியா.

## கொரோனா வைரஸை கட்டுப்படுத்தியதன் பின்னரே தேர்தலை வைப்பது சிறந்தது

உலகமெல்லாம் கோரத்தாண்டம் ஆடுகின்ற கொரோனா வைரஸ் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டதன் பின்னரே தேர்தலை வைப்பது உசிதமானது. தொடர்ந்தும் இலங்கை அரசாங்கமானது இனவாத அரசியலை மேற்கொண்டு வருவதால் தமது அரசியல் இருப்பை தக்க வைத்துக்கொள்வதற்காக மக்கள் மீது சுமைகளை சுமத்தி வருகிறார்கள்.

இன்றைய கால சூழ்நிலையில் தேர்தலை மிக தேவையான ஒன்றாகவே அரசாங்கம் கருதுகிறது. மக்களின் இயல்பு வாழ்க்கை என்பது இன்னமும் மாற்றம்பெறவில்லை. கொரோனா வைரஸ் தாக்கம் காரணமாக கம்பனிகள், சிறு கைத்தொழில்கள், சிறு வியாபாரம், விவசாயம், பண்ணை வகுப்புக்கள் என்று பல்வேறு தொழில் துறைகளும் பாதிக்கப்பட்டுள்ள நிலையில் மீள் கட்டுமானங்களை கட்டியெழுப்ப வேண்டிய தேவை அரசாங்கத்திற்கு இருக்கிறது. அதே நேரம் தேர்தல் ஒன்றை நடத்தி அதில் வெற்றி பெறாமல் அதை கொண்டு செல்வது என்பது மிகவும் கடினமான விடயம். அதற்காகவே இன்றும் பலர் தேர்தலை வைக்க வேண்டும் என்று கூறுகின்றார்கள்.

தேர்தல் வைக்கப்படுகின்ற காலங்களில் கொரோனா தொற்று ஏற்படுத்தப்படுமாக இருந்தால் அது ஒட்டுமொத்த இலங்கை மக்களையும் பாதிக்கும். அபிவிருத்தி அடைந்த நாடுகள் இன்னமும் கொரோனா வைரஸை கட்டுப்படுத்த முடியாத சூழ்நிலை உருவாகியுள்ளது. உலக சுகாதார சபையும் கூட அதனை பூரணமாக கட்டுப்படுத்த முடியாது என்று அறிவித்திருக்கிறது. ஆகவே படிப்படியாகத் தான் கொரோனா வைரஸை கட்டுப்படுத்துவதற்கான நிலைமைகள் உருவாக்கப்பட வேண்டும். இதில் அரசியல் இலாபம் கருதி இன்று பலர் செயற்பட்டுக்கொண்டு இருக்கிறார்கள். ஒரு சில அரசியல் தமிழ் தலைமைகள் கோட்டபாய ராஜபக்சவை ஆதரிக்க வேண்டும் என்கிறார்கள். இந்த நிலைமையில் இந்த தேர்தலுக்காக வடக்கு கிழக்கில் போட்டா போட்டி இடம்பெறுகிறது. மீண்டும் ஒரு பிழையான அரசாங்கத்தை கொண்டு வருவதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டுக்கொண்டிருக்கின்றன.

தமிழ் தேசிய கூட்டமைப்பிலுள்ள ஒரு சில அரசியல் தலைமைகளும் இவ்வாறான தவறை ஏற்படுத்துகிறார்கள். தேசியம் சுயநிர்ணய உரிமை சார்ந்த விடயங்களை முன்னெடுப்பதில் தமிழ் தரப்பு தொடர்ந்தும் தவறுகிறது. ஆயுத போராட்ட கட்சிகளுடைய நிலைமைகளை எடுத்துக்கொண்டால் அவர்களை கூறு போடுவதற்காக கடந்த 30 ஆண்டுகளுக்கு மேலாக முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகிறது. குறிப்பாக அனைத்து ஆயுத கட்சிகளையும் தனிமைப்படுத்திவிட்டால் தமக்கான அரசியல் வெற்றி உறுதி என்பதை அரசாங்கம் சாதகமாக்கிக் கொள்ள நடவடிக்கைகள் எடுத்துவருகிறது. வடகிழக்கு இணைந்த தமிழர் தாயகத்தில் தொடர்ந்தும் கொரோனா வைரசினால் பாதிக்கப்பட்டவர்கள் தங்கும் முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளன.

தென் பகுதிகளில் எத்தனையோ இடம் இருக்க வடபகுதியில் மட்டும் இவர்களுக்கான சிகிச்சை அளிப்பது என்பது ஏற்றுக்கொள்ளப்பட முடியாதது ஒன்று. ஆகவே மக்களை குழப்பி விட்டு தேர்தல் ஒன்றை நடத்தி அதில் அரசாங்கம் வெற்றி காணலாம் என்பது பகல் கனவாகவே உள்ளது.

# உலக வரலாற்றில் குறுஞ்சமர்

**106** வெவ்வேறு குறிப்புக்களுக்காகவும் கெரில்லாப் பிரதேசத்திற்கு வெளியே இருக்கின்ற ஏனைய கெரில்லாப் படைப்பிரிவுகளுடனான கடிதத்தொடர்பிற்காகவும் குறிப்பேடு, பென்சில், பேனை போன்றவற்றை வைத்திருக்க வேண்டும். இவையாவும் வீரனுக்கு மிக அவசியமானவையாகும். அவனிடம் கையில் எப்பொழுதும் கயிறு, இது தவிர தையலூசி, நூல், பொத்தான்கள் போன்றனவும் இருக்கும். இவை யாவற்றினதும் உதவியால் கெரில்லா எதிலும் குறையை உணரமாட்டான். உண்மையில் அவன் உபகரணத்தை இவ்வாறாகவே கொண்டு திரிகின்றான். ஆனால் மாறாக அது போர் வாழ்வின் கடினமான சூழ்நிலைகளில் குறைந்தளவேனும் வசதிகளை அவனுக்குத் தருகின்றது.



2. கெரில்லாப் படைப்பிரிவை ஒழுங்கமைத்தல் கெரில்லாப் படைப்பிரிவை ஒழுங்கமைக்கின்ற விடயத்தில் ஏதாவதொரு குறித்த திட்டத்தையே எப்பொழுதும் கடைப்பிடிக்கக் கூடாது. கெரில்லாப் படைப்பிரிவை ஒழுங்கமைப்பதற்கு அப்பிரதேசத்தின் பண்புக்கமைய மிக வெவ்வேறு வகையிலான முறைகளைக் கையாளலாம். இக் கருத்திற்கமைய நாங்கள் எமது பொதுவான நியமனங்கள் பற்றிய அனுபவங்களைக் கூறலாம். ஆனால் இதன் போது நாங்கள் எப்பொழுதும் நினைவுபடுத்திக்கொள்வது யாதெனில் எமது அனுபவங்களைப் பின்பற்றுவதாயின் அதனை இயந்திரம்போல் தொடராமல் ஒவ்வொரு ஆயுதக் குழுக்களதும் செயற்பாடுகளின் சிறப்பம்சங்களை அடிப்படையாகக் கொண்டே தொடர வேண்டும் என்பதாகும். எமது கருத்துப்படி படைப்பிரிவின் ஆளணி எண்ணிக்கையை நிர்ணயித்தல் என்பது மிகவும் கடினமான பணியாகும். நாங்கள் முன்னரே குறிப்பிட்டதைப்போல கெரில்லாப் படைப்பிரிவுகள் தமது ஆளணி எண்ணிக்கையைப் பொறுத்தும் ஒழுங்கமைப்பைப் பொறுத்தும் வெவ்வேறானதாக இருக்கலாம். கெரில்லாவிற்குச் சாத்தியமான சூழ்நிலையைக் கொண்ட மலைப்பிரதேசத்தில் படைப்பிரிவு இருக்கின்றதென்று கொள்வோமானால் அங்கே தொடர்ச்சியான பின்வாங்கலுக்கான சாத்தியம் குறைகின்றது. ஆனால் சமர் நடவடிக்கைக்கான தளத்தை உருவாக்குவதற்கு இது முற்றிலும் சாத்தியமற்ற இடமாகும். இவ்வாறான சூழ்நிலைகளில் செயற்படுகின்ற ஆயுதக்குழுவின் எண்ணிக்கை 150 பேராகும். இது அதிகமாக இருந்தாலுங்கூட இவ் எண்ணிக்கையை மேலும் அதிகரிக்கக் கூடாது. இக் குழுவின் மிகச் சிறந்த ஆளணி எண்ணிக்கை கிட்டத்தட்ட 100 பேரே ஆகும். கியூப இராணுவக் கீழ்ப்படிவுக் கோட்பாட்டுக்கமைய மேற்குறித்த குழுவை மேஜரொருவர் தலைமை தாங்குவார். 100 – 150 பேரிற்குத் தலைவனாக மேஜர் இருப்பார். 30 – 40 பேரைக் கொண்ட எவ்வளவு படைப்பிரிவுகளைக் கட்டியெழுப்பலாமோ அவ்வளவிற்குக் கப்டன்கள் இருப்பார்கள். கப்டனின் பணிகளில் படைப்பிரிவை நிர்வகித்தல் அதனைப் பூரணப்படுத்தல் படைப்பிரிவின் சகல ஆளணிகளுடன் சமரை மேற்கொள்ளல் வளங்களைப் பங்கிடல் அதனது பொதுவான ஒழுங்கமைப்பு போன்றன உள்ளடக்கப்படுகின்றன. சுயமான பணிகளை நிறைவேற்றுகின்ற மிகச்சிறிய குழுப்பிரிவுகள் செக்சனாகக் கணிக்கப்படுகின்றன. செக்கனில் அண்ணளவாக 8 – 12 பேர் இருப்பார்கள். இதற்குக் கட்டளையாளனாக லெப்டினன்ட் இருப்பார். இவர் எப்பொழுதும் படைப்பிரிவின் கட்டளையாளனுக்குக் (கப்டனுக்குக்) கீழ்ப் பணிந்தவராக இருப்பார்.

வழக்கமாக கெரில்லாக்கள் சமர் நடவடிக்கைகளைச் சிறு குழுக்களாகவே மேற்கொள்கின்றனர். ஆகவே, மிகவும் வினைத்திறன்மிக்க படைப்பிரிவாகச் செக்சனையே கருத வேண்டும். ,ச்சந்தர்ப்பத்தில் 8 – 10 பேர் ஒன்றாகச் செயற்படுகின்றனர். ஆதலாலேயே, முக்கிய சில சமயங்கள் தவிர, செக்சன் நேரடியாக லெப்டினன்டால் வழிநடத்தப்படுகின்றதுடன், அடிக்கடி படைப்பிரிவு இருக்கின்ற அதே பிரதேசத்தில் இருந்தாலும் கப்டனின் நேரடித் தொடர்பின்றிச் செயற்படுகின்றது. சமரில்லாத சமயங்களின் போது, செக்சனைப் பிரிக்கக் கூடாது. செக்சனின் அல்லது படைப்பிரிவின் கட்டளையாளன் படைக்கட்டமைப்பில் இல்லாத சமயங்களில், அவனது இடத்தை வேறொரு அதிகாரி நிரப்ப வேண்டும். அவர் முன்னரே இப்பணியை நிறைவேற்றுவதற்கெனச் சிறப்பாகத் தயார்ப்படுத்தப்பட்டவராக இருக்க வேண்டும். கெரில்லாப் படைப்பிரிவில் கட்டளையாளனாக இருந்தாலும் சரி போர் வீரனாக இருந்தாலும் சரி சகலரும் சமமானவர்களே. அவர்களைப் பொறுத்தவரையில் உணவுப்பொருள் விநியோகம் சம்பந்தமான சகல விடயங்களும் மிக முக்கியமானவையாகும். கெரில்லா வாழ்க்கைச் சூழ்நிலையில் எப்பொழுதும் உணவுப் பொருட் பற்றாக்குறை எதிர்கொள்ளப்படுகின்றதென்பதால் மாத்திரமன்றி, ஒவ்வொரு நாளும் உணவுப்பொருள் பங்கீட்டை மேற்கொள்ள வேண்டும் என்பதனாலும் முக்கியமானதாகின்றது. கெரில்லாக்கள் நியாயப்பாட்டை மிக நுட்பமாக உணர்பவர்கள். ஆகவே தான், நியாயமான உணவுப்பொருட் பங்கீட்டில் ஏதாவது மோசடி ஏற்படுமானால், அதனை வேதனை தரும் விடயமாகக் காண்பார்கள். உணவுப்பொருட் பங்கீட்டில் எவருக்கும் சலுகை வழங்குவது ஒருபோதும் அனுமதிக்கப்படமாட்டாது. இன்னொரு விடயம் இராணுவப்பொருட் பங்கீடாகும். ஏனெனில் இப்பொருட்களும் தனிப்பட்ட பாவனைக்கான பொருட்களாகும். இரண்டு விடயத்தைக் கவனத்தில் எடுக்க வேண்டும். முதலாவது போர் வீரர்களின் தேவைகள் (இருக்கின்ற பொருட்களை விடத் தேவை கிட்டத்தட்ட எப்போதும் அதிகரித்தே காணப்படுகின்றது) திருப்தியாக்கப்படுகின்றனவா என்பது பற்றி அவ் வீரர்களின் கருத்து இரண்டாவது, அவர்களில் ஒவ்வொருவரதும் சமர்த் தகுதியும் காலமுமாகும். தகுதியையும் காலத்தையும் சரியாகத் துல்லியமாகக் கணிப்பது கடினமாகும். இராணுவப் பொருட் பங்கீட்டின் போது, அவசியம் சிறப்பாகத் தெரிவு செய்யப்பட்ட இந் நடவடிக்கைக்குப் பொறுப்பான நபரை நியமிக்க வேண்டும். அவர் குழுவின் கட்டளையாளனின் நேரடிக் கட்டுப்பாட்டின் கீழ் இருக்க வேண்டும். இவ்வாறாகவே படைப்பிரிவிற்குக் கிடைக்கின்ற ஏனைய தனிப்பட்ட பாவனைப் பொருட்களும் பங்கிடப்படுகின்றன. சுருட்டுகளும் சிகரெட்டுக்களும் சகல படைப்பிரிவின் உறுப்பினர்களுக்கிடையில் சம அளவிலும் அதற்குரிய இறுக்கமான ஒழுங்கு விதிக்கமையவும் பங்கிடப்பட வேண்டும்.

தொடர்வான்...
**நெற்றிப்பொறியன்**

# தமிழ் தரப்புகளின் ஒன்றிணைவு ஏன் அவசியம்?

அரசாங்கத்தை பொறுத்தவரையில் தேசியம் சுயநிர்ணய உரிமையை தமிழ் மக்களுக்கு வழங்கக்கூடாது என்பதில் 1948 ஆம் ஆண்டிலிருந்தே அதாவது இலங்கை சுதந்திரமடைந்த காலப்பகுதியிலிருந்தே கடைப்பிடித்து வந்தனர் எனலாம். அப்போது இருந்த தமிழ் அரசியல் புத்திஜீவிகள் அரசாங்கத்துடனான ஒத்த அரசியலை மேற்கொண்டு வந்தனர். இதன் காரணமாக வே பிரிட்டிஷ் அரசாங்கம் சிங்களவர்களின் கையில் நாட்டை ஒப்படைத்து வெளியேறியது. இனங்களுக்கிடையிலான பிரச்சனைகளை நாம் தீர்த்துக்கொள்கிறோம் என்பதன் விளைவே தமிழ் மக்களுடைய தீர்வு எட்டப்படாமைக்கான காரணமாக இன்றும் அமைகிறது.



தமிழ் இனத்தை வைத்தே தமிழ் இனத்தை அழிக்கின்ற ஒரு நடவடிக்கையாகவே கடந்த காலத்திலிருந்து இலங்கையில் போர் முடியும் வரை அல்லது முடிந்ததற்குப் பின்னரும் தமிழ் மக்கள் மீதான அடக்கு முறை தொடர்கிறது. அனைத்து தமிழ் இயக்கங்களும் இனியாவது தமிழ் தேசியத்தை பாதுகாக்க களத்தில் இறங்க வேண்டும். அவ்வாறு இறங்க தவறினால் தமிழ் தேசியம் என்பது அரச தரப்பினால் அழித்தொழிக்கும் ஒரு நடவடிக்கையாகவே இது அமையும்.

**'தமிழர்கள் எல்லோரும் ஒற்றுமையாக இருக்க வேண்டும். தமிழ் தேசியத்தின் கீழ் ஒற்றுமையாக அணி திரள வேண்டும். ஒற்றுமையின்மையே தமிழர்களின் வீழ்ச்சிக்கு காரணம்....'**

தமிழர்களின் அனைத்துப் பிரச்சினைக்கும், தமிழ் இன ஒற்றுமையே தீர்வு என்று வலியுறுத்தும் தமிழ் தேசியவாதிகள் தமக்குள் ஒற்றுமையாக இருக்கின்றனரா? தமிழ் மக்கள் தமிழ் தேசியத்தை தவிர வேறெந்த அரசியல் கொள்கையையும் பின்பற்றி விடக் கூடாது என்பதில் உறுதியாக இருக்கின்றனர். தமிழர்களில் சிலர் இடது சாரிகளாக இருப்பது கூட அவர்களுக்கு பிடிப்பதில்லை. (இதன் மூலம் தமிழ் தேசிய வாதிகள் தம்மை வலதுசாரிகளாக காட்டிக் கொள்கின்றனர்.) கம்யூனிசம், சோஷலிசம் தலித்தியம் பெண்ணியம் என்பன எல்லாம் தமிழர்களின் ஒற்றுமையை குலைத்து விடும் என்று பதறித் துடிப்பார்கள். உண்மையில் ஒற்றுமையாக ஒன்று சேர வேண்டியவர்கள் தமிழ் தேசியவாதிகள் தான். அவர்கள் தமது தவறை மறைப்பதற்காகவே தமிழ் மக்கள் மேல் பழியைப் போடுகின்றனர்.

தமிழ் தேசியம் என்றைக்காவது தமிழ் மக்கள் அனைவரையும் ஒன்று சேர்த்திருக்கிறதா? உண்மையில் தமிழ் மக்கள் ஒற்றுமையாக சேர்ந்து நின்ற சந்தர்ப்பங்கள் வரலாற்றில் நிறைய உண்டு. ஆனால் அப்போதெல்லாம் தமிழ் தேசியவாதிகள் தமக்குள் மோதிக் கொண்டதன் மூலம் எதிரிக்கு தமது ஒற்றுமையின்மையை பறைசாற்றிக் கொண்டார்கள். ஈழப்போர் தொடங்கிய காலத்தில் நகைச்சுவைத் துணுக்கு ஒன்று ஈழத் தமிழ் மக்கள் மத்தியில் பிரபலமாக இருந்தது. **'ஸ்ரீலங்கா அரசு போராளிக் குழுக்களை அழிப்பதற்கு அதிக சிரமப்படத் தேவையில்லை. அவர்கள் கையில் தமிழீழத்தை கொடுத்து விட்டால் போதும். அதற்குப் பின்னர் தமக்குள் அடிபட்டு அழிந்து தமிழீழத்தை மீண்டும் சிங்களவனிடம் கொடுத்து விடுவார்கள்.'**

தமிழ் நாட்டில் அண்ணாதுரை தலைமையிலான திராவிட முன்னேற்றக் கழகமே தமிழ் தேசியக் கொள்கையை முதன் முதலாக வெகுஜன மயப்படுத்தியது. அவர்கள் தான் முதன்முதலாக தனித் தமிழ்நாடு கோரிக்கையை எழுப்பினார்கள். ஆனால் திமுக கூட திராவிடர் கழகத்தின் ஒற்றுமையை சீர்குலைத்து வெளியே வந்த கட்சி தான். அதற்கு அவர்கள் பல கொள்கை முரண்பாடுகளை கூறிக் கொண்டார்கள். பிற்காலத்தில் கருணாநிதி எம்.ஜி.ஆருக்கு இடையிலான பிணக்கு காரணமாக அ.தி.மு.க உருவானது. தமிழர்களின் ஒற்றுமை மேலும் சிதைந்தது. அதற்குப் பின்னர் வைகோ பிரிந்து சென்றார். இந்தப் பிரிவினைகளுக்கு எந்தக் கொள்கை முரண்பாடும் காரணம் அல்ல.

ஈழத்திலும் அது தான் நிலைமை. ஆரம்பத்தில் ஜி.ஜி.பொன்னம்பலத்தின் தமிழ்க் காங்கிரஸ் மட்டுமே இருந்தது. அன்றைய தமிழ்க் காங்கிரசின் அரசியலுக்கும் இன்றைய தமிழ் தேசியக் கூட்டமைப்பின் அரசியலுக்கும் இடையில் எந்த ஒற்றுமையும் கிடையாது. அரசாங்கத்தில் பதவிகளை பெற்றுக் கொள்வதும் தமிழ் மேட்டுக்குடி வர்க்க நலன்களை பராமரிப்பதுமே அன்றைய தமிழ்க் காங்கிரசின் பிரதானமான செயற்பாடுகளாக இருந்துள்ளன.

செல்வநாயகம் தலைமையில் ஒரு குழுவினர் தமிழ்க் காங்கிரசில் இருந்து பிரிந்து சென்று தமிழரசுக் கட்சி உருவாக்கினார்கள். அப்போது சில கொள்கை முரண்பாடுகள் பற்றி பேசிக் கொண்டார்கள். செல்வநாயகத்தின் தமிழரசுக் கட்சியே இன்றைய தமிழ் தேசியக் கோட்பாட்டுக்கு அஸ்திவாரம் போட்டது எனலாம். அந்தக் கட்சியே முதன் முதலாக தமிழ் மொழி பேசும் மக்கள் எல்லோரையும் ஒரே அரசியலின் கீழ் ஒன்று சேர்த்தது. சாதிய முரண்பாடுகள் கூர்மை அடைந்திருந்த அந்தக் காலங்களில் தாழ்த்தப்பட்ட சாதியினர் பெருமளவில் இடதுசாரிக் கட்சிகளையே ஆதரித்து வந்தனர். இடதுசாரிக் கட்சிகளின் செல்வாக்கு வளர்வதை தடுப்பதும் தமிழரசுக் கட்சியின் முக்கியமான நோக்கமாக இருந்துள்ளது.

குறைந்தது ஒரு தசாப்த காலமாகவேனும் தமிழ்க் காங்கிரசும் தமிழரசுக் கட்சியும் ஒற்றுமை இல்லாமல் ஒருவருக்கொருவர் மோதிக் கொண்டார்கள். தேர்தல் காலங்களில் ஒருவரை மற்றவர் திட்டித் தீர்த்தார்கள். ஆனால் காலப்போக்கில் ஒருமையின் அவசியத்தை அவர்கள் புரிந்து கொண்டார்கள். எழுபதுகளில் இரண்டு கட்சிகளும் ஒன்று சேர்ந்து தமிழர் விடுதலைக் கூட்டணி என்ற புதிய கட்சியை உருவாக்கினார்கள். அப்போது ஈழத் தமிழ் மக்கள் ஒற்றுமையாக கூட்டணியை ஆதரித்தார்கள். 1977 ஆம் ஆண்டு நடந்த தேர்தலில் பெரும்பான்மை தமிழ் வாக்காளர்களின் பலத்தில் வென்றார்கள். சிங்களவர்களே பொறாமைப்படும் அளவிற்கு வடக்கு கிழக்கு மாகாணத்தின் அனைத்து ஆசனங்களையும் கைப்பற்றி பாராளுமன்றத்தில் எதிர்க் கட்சியாக அமர்ந்தார்கள்.

அந்த ஒற்றுமை நீண்ட காலம் நிலைக்கவில்லை. யாரும் எதிர்பாராத இடத்தில் இருந்து வந்த சக்திகளினால் தமிழ் தேசியத்தின் ஒற்றுமை குலைக்கப் பட்டது. கொள்கை முரண்பாடு காரணமாக தமிழர் விடுதலைக் கூட்டணியின் இளைஞர் அணியினர் தீவிரவாதிகளாக மாறினார்கள். தமிழ் மாணவர் பேரவை, தமிழீழ விடுதலை இயக்கம், தமிழீழ விடுதலைப் புலிகள் போன்ற குழுக்கள் ஆயுதப் போராட்டத்தை விரும்பின. மிதவாத தமிழ் தேசியவாதிகளுக்கும் தீவிரவாத தமிழ் தேசியவாதிகளுக்கும் இடையிலான முரண்பாடுகள் முற்றி இரண்டு தரப்பினரும் பகைவர்கள் ஆனார்கள். இரண்டு தரப்பினரும் தாமே உண்மையான தமிழ் தேசியவாதிகள் என்று அறிவித்துக் கொண்டனர்.

தீவிர தமிழ் தேசியவாதிகள் கைகளில் ஆயுதங்கள் இருந்ததால் மிதவாத தமிழ் தேசிய தலைவர்களை துரோகிகள் என்றழைத்து சுட்டுக் கொன்றனர். அதனால் மிதவாத தமிழ் தேசியவாதிகள் தமது பாதுகாப்பிற்காக சிங்கள அரசை சார்ந்து வாழ நிர்ப்பந்திக்கப்பட்டனர். சில இடங்களில் கூட்டணித் தலைவர்கள் பிரமுகர்கள் தீவிரவாத இளைஞர்களை பொலிசிற்கு காட்டிக் கொடுத்த சம்பவங்களும் நடந்துள்ளன. மெல்ல மெல்ல ஆயுதமேந்திய குழுக்களின் ஆதிக்கம் மேலோங்கியதால் தமிழ் மக்களும் கூட்டணியை விட்டு விலகி ஆயுதபாணிக் குழுக்களை ஆதரித்தனர்.

தமிழ் தேசிய ஆயுதபாணிக் குழுக்களுக்கு இடையில் கூட ஒற்றுமை இருக்கவில்லை. பிரபாகரன் சில வருட காலம் டெலோவில் இருந்தார். பின்னர் பிரிந்து சென்று புலிகள் அமைப்பை ஸ்தாபித்தார். பதினைந்து வருடங்களுக்குப் பின்னர் பிரபாகரன் தலைமையிலான புலிகள் ரெலோ இயக்கத்தை அழித்து விட்டனர். ஆரம்ப காலத்தில் புதிய புலிகள் இயக்க தலைவராக பதவி வகித்த உமா மகேஸ்வரன் பின்னர் பிரிந்து சென்று புளொட் என்ற இயக்கத்தை உருவாக்கினார். அதற்கு எந்தக் கொள்கை முரண்பாடும் காரணம் அல்ல. ஊர்மிளா என்ற பெண் போராளியின் மரணம் தொடர்பாக எழுந்த சர்ச்சையின் காரணமாகவே உமா மகேஸ்வரன் தலைமையில் ஒரு குழு பிரிந்து சென்றது.

புளொட் இயக்கமும் ஒற்றுமையாக இயங்கவில்லை. உமா மகேஸ்வரனின் தலைமைக்கு எதிராக கிளர்ச்சி செய்த தீப்பொறி குழுவினர் பிரிந்து சென்றனர். இந்திய - இலங்கை ஒப்பந்தம் கைச் சாத்திடப்பட்ட காலத்தில் புளொட்டில் இருந்து இன்னொரு குழுவினர் பிரிந்து சென்று ஈ.என்.டி.எல்.எப். என்ற பெயரில் இந்திய இராணுவத்தின் கூலிப் படையாக இயங்கினார்கள். நீண்ட காலமாக புலிகள் கட்டுக்கோப்பான அமைப்பாக ஒற்றுமைக்கு பெயர் பெற்று விளங்கியது. ஆனால் இந்திய இராணுவத்தின் வெளியேற்றத்தின் பின்னர் புலிகளின் இரண்டாம் மட்ட தலைவர் மாத்தையா RAW உளவாளி என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப் பட்டார். அது ஒரு தனி மனிதனுக்கு எதிரான நடவடிக்கையாக இருக்கவில்லை. மாத்தையாவுக்கு விசுவாசமான போராளிகளும் கைது செய்யப்பட்டனர். சில நூறு பேரைக் கொண்ட மாத்தையா குழுவினர் தப்பிச் சென்று சிங்கள இராணுவத்துடன் சேர்ந்து கொண்டார்கள்.

நோர்வே அனுசரணையாளராக செயற்பட்ட சமாதான பேச்சுவார்த்தை நடந்த காலத்தில் கிழக்கு மாகாண தளபதியான கருணா தலைமையில் ஒரு குழு பிரிந்து சென்றது. இரண்டு பிரிவுகளுக்கு இடையில் நடந்த ஆயுத மோதல்கள் காரணமாக தோல்வியடைந்து பின்வாங்கிய கருணா குழுவினர் சிங்கள அரசாங்கத்துடன் சேர்ந்து கொண்டனர். தீவிர தமிழ் தேசியவாதிகள் அரசாங்கத்துடன் சேர்வது எண்பதுகளிலேயே தொடங்கி விட்டது. வடக்கு கிழக்கில் புலிகளினால் தடை செய்யப்பட்ட ரெலோ புளொட், ஈ.பி.ஆர்.எல்.எப். ஆகிய இயக்கங்கள் தமது பாதுகாப்பிற்காக சிங்கள இராணுவத்தின் தயவில் தங்கியிருக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. ஸ்ரீலங்கா இராணுவம் புலிகளுக்கு எதிரான போரில் அவர்களை கூலிப் படைகளாக பயன்படுத்தியது.

ஈழத்தமிழ் தேசியவாதிகள் தமக்குள் ஒற்றுமை இல்லாமல் ஒருவரை ஒருவர் கொன்று குவித்த காலத்தில் தமிழ் தேசிய ஆதரவாளர்கள் 'தமிழ் மக்களின் ஒற்றுமையின்மை' பற்றி பாடம் நடத்திக் கொண்டிருந்தார்கள். தமிழர் விடுதலைக் கூட்டணி தேர்தலில் போட்டியிட்ட காலத்தில் அவர்களை ஒற்றுமையாக ஆதரித்த தமிழ் மக்கள் தான் பின்னர் புலிகளின் ஆயுதப் போராட்டத்தையும் ஆதரித்தார்கள். 1995 ஆம் ஆண்டு புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்த யாழ் குடாநாட்டை ஸ்ரீலங்காப் படைகள் கைப்பற்றின. 'யாழ்ப்பாண தமிழரின் சனத்தொகையில் மிகக் குறைந்த சதவீதமானோரே புலி இயக்கப் போராளிகளாக இருந்ததாகவும் எல்லோரும் ஒன்று சேர்ந்து போராடி இருந்தால சிங்களப் படைகளின் முன்னேற்றத்தை தடுத்து நிறுத்தி இருக்கலாம் என்றும்' புலிகளின் பிரச்சாரகர்கள் தெரிவித்தனர்.

2009ல் நடந்த இறுதிப்போரில் வன்னியில் இருந்த அனைத்து தமிழ் மக்களும் ஒற்றுமையாக ஒன்று சேர்ந்து போராடினார்கள். இறுதி யுத்தம் தொடங்குவதற்கு முன்னரே வீட்டுக்கொரு பிள்ளை போராளியாக வேண்டும் என்று உத்தரவிட்ட புலிகள் கட்டாய ஆட்சேர்ப்பில் ஈடுபட்டனர். பல குடும்பங்களில் பிள்ளைகள் பலவந்தமாக பிடித்துச் சென்று போராளிகளாக்கப்பட்டதை இன்றைக்கும் புலி ஆதரவாளர்கள் மறுத்து வருகின்றனர். 'வன்னியில் வாழ்ந்த தமிழ் மக்கள் உணர்வு பூர்வமாக தாமாகவே விரும்பிச் சென்றனர்.' என்றே சொல்லி வருகின்றனர். அப்படியானால் தமிழ் மக்கள் எல்லோரும் ஒற்றுமையாக ஒன்று சேர்ந்து தான் போராடி இருக்கிறார்கள்.

தமிழ் மக்கள் எல்லோரும் ஒற்றுமையாக சேர்ந்து போராடிய போதிலும் போரில் ஏற்பட்ட தோல்வி எங்கிருந்து வந்தது? அதற்கு கருணா குழு ஈபிடிபி போன்ற அரச அடிவருடிகளான தமிழ் கூலிப் படையினரை குற்றஞ் சாட்டுகின்றனர். அவர்கள் எல்லோரும் முன்னொரு காலத்தில் தமிழ் தேசியவாதிகளாக இருந்தவர்கள். அதாவது தமிழ் மக்கள் என்றைக்கும் ஒற்றுமையாகத் தான் இருந்திருக்கிறார்கள். அவர்களுக்குள் பிரிவினைகள் இருக்கவில்லை. ஆனால் தமிழ் தேசியவாதிகளுக்கு இடையில் தான் ஒற்றுமை இல்லை. அது தான் முக்கியமான பிரச்சினை.

புலிகளுக்குப் பின்னர் தமிழ் தேசியவாதிகளின் ஒரேயொரு நம்பிக்கை நட்சத்திரமாக கருதப்படும் தமிழ் தேசிய கூட்டமைப்பிற்குள் ஒற்றுமை இல்லை என்பதை இங்கே சொல்லத் தேவை இல்லை. கூட்டமைப்பு என்பது பல கட்சிகளின் சேர்க்கை. வட மாகாண சபைத் தேர்தலில் தமிழர் ஒற்றுமையின் முக்கியத்துவம் பற்றி பேசி வாக்குக் கேட்டார்கள். அறுதிப் பெரும்பான்மை தருமாறு கெஞ்சினார்கள். தமிழ் மக்களும் ஒற்றுமையாக ஒன்று சேர்ந்து கூட்டமைப்புக்கு தமது ஓட்டுக்களை அள்ளிக் கொடுத்தார்கள்.

தொடரும்...
நெற்றி பொறியன்

# பொருளாதார நெருக்கடிக்குள் இலங்கை

இலங்கை ஒரு அபிவிருத்தியடைந்து வரும் நாடு. கடந்த 30 வருடங்களாக இலங்கையில் இடம்பெற்ற கோர இன மோதலால் பொருளாதார ரீதியாகவும் சமூக ரீதியாகவும் மிகவும் பாதிக்கப்பட்ட நிலையில் ஒருவாறு யுத்தம் மௌனிக்கப்பட்டதன் பின்னர் மெதுவாக அபிவிருத்தி பாதையில் நடைபோடத் தொடங்கிய நேரத்தில் சீனாவில் உருவான கொரோனா நோய்த் தாக்கம் உலகை மிகக் கோரமாக அச்சுறுத்தி வரும் நிலையில் அதன் தாக்கம் இலங்கையையும் மிரட்டி வருகின்றது. கடந்த இரண்டு மாதகாலமாக நாடு முழுவதும் முடக்கப்பட்ட நிலையில் சகல பொருளாதார நிலைகளும் மூடப்பட்டு வருமானப் பகுதிகள் அனைத்தும் செயற்பாடற்று காணப்பட்ட நிலையில் ஏற்கனவே பொருளாதார ரீதியாக பின்தங்கி இருந்த இலங்கை மிகவும் ஆபத்தான சூழ்நிலைக்கு சென்றுள்ளது. யுத்தம் இடம்பெற்ற காலத்தில் உலக நாடுகளிடம் பல பில்லியன் கோடி கடன் பட்டுள்ள நிலையில் யுத்தம் மௌனிக்கப்பட்டதன் பின்னர் சிதைந்து போயுள்ள நாட்டை கட்சியெழுப்பவென அதற்கு சீனா, இந்தியா, அமெரிக்கா உலக வங்கி என்பவற்றிடம் பல கோடி பில்லியன் கடன் பெற்று திக்குமுக்காடி வரும் நிலையில் 2019 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் இடம்பெற்ற ஐஎஸ். ஐஎஸ் தாக்குதலினால் பல வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் கொல்லப்பட்டும் பலர் காயமடைந்த நிலையில் கடந்த ஆண்டு இறுதிப் பகுதி வரை சுற்றுலாத்துறை வீழ்ச்சியடைந்து காணப்பட்டது.

இந்நிலையில் 2020 ஆம் ஆண்டு ஆரம்பத்தில் கொரோனா வைரஸ் தாக்கம் காரணமாக விமானப் போக்குவரத்துக்கள் சுற்றுலாப்பயணிகளின் வருகை வெளிநாட்டு ஏற்றுமதிகள், கைத்தொழில் துறைகள், பெருந்தோட்ட ஏற்றுமதிகள் அனைத்தும் முற்றாக முடக்கப்பட்டது. இதனால் அரசுக்கு வரும் வருமானங்கள் அனைத்தும் வீழ்ச்சியடைந்து சென்றது. கடந்த இரண்டு மாத முடக்கத்தால் மக்கள் வேலை வாய்ப்பின்றி கடும் பொருளாதார நெருக்கடியை அவர்கள் சந்தித்த பொழுது அரசு அவர்களுக்கு ரூபாய் 5,000 மாதாந்த நிவாரணமாக சமுர்த்தி பயனாளிகள், நாட்கூலி தொழிலாளிகள், பஸ் சாரதிகள், பஸ் நடத்துனர்கள், மாற்றுத் திறனாளிகள், வயோதிபர்கள், விதவைகள் என அனைவருக்கும் வழங்கியது. அத்துடன் நிவாரணப் பொருட்களையும் வழங்கியது. வேலையற்று இருந்தாலும் அரச ஊழியர்கள் ஓய்வூதியக்காரர்களுக்கு மாதாந்தம் வழங்கப்பட்டது.

இவ்வாறு வருமானம் எதுவுமற்று பொருளாதார ரீதியாக மிகவும் பின் தங்கிய நிலையில் இருந்தாலும் அரசு எடுத்த இவ்வாறான காத்திரமான முயற்சிகள் உண்மையில் பாராட்டப்பட வேண்டிய விடயம் தான். ஏனெனில் இன்று பொருளாதார ரீதியில் மிகவும் பலமான நாடுகளான அமெரிக்கா, பிரித்தானியா, சவுதிஅரேபியா, கனடா, ஜேர்மன் போன்ற நாடுகள் மிகவும் அல்லல்பட்டு கொண்டு இருக்கின்றன. குறிப்பாக உலகில் மிகவும் வலிமையான பொருளாதார கட்டமைப்பை கொண்ட சுகாதாரத் துறையில் மிகவும் வளர்ச்சியுற்ற உலகின் முதலாவது வல்லரசென சொல்லிக் கொண்டு இருக்கும் அமெரிக்கா இன்று கொரோனாவில் உயிரிழந்தோர் மற்றும் பாதிக்கப்பட்டோர் நிலையில் முதலாவதாக உள்ளமை இங்கு சுட்டிக்காட்டத்தக்கது. அத்துடன் உலகின் மிக வலிமையான எண்ணெய் வள நாடான சவுதி அரேபியா கடந்த சில தினங்களுக்கு முன்னர் உலக வங்கியிடம் பலகோடி ரில்லியன் கடன் கோரியுள்ளதுடன் அந் நாட்டில் அரச தொழில் புரிவோர் தங்கள் ஒரு மாத சம்பளத்தை அரசுக்கு செலுத்த வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது. இதே போல பிரான்ஸ் நாடும் பலகோடி ரில்லியன் கடன் கோரி நிற்கின்றது. அந்த வகையில் பிரித்தானியா கனடா, இத்தாலி, ஸ்பெயின் போன்ற நாடுகளும் உலக வங்கியிடம் கடன் கோரி நிற்கின்றன. இந் நாடுகள் அனைத்தும் கைத்தொழில் நாடுகள் என்பதுஇங்குகுறிப்பிடத்தக்கவிடயமாகும். அபிவிருத்தியடைந்த நாடுகளை பார்க்கும் பொழுது அவை பெரும்பாலும் கைத்தொழில் நாடுகளாக இருக்கும். அபிவிருத்தியடைந்து வரும் இலங்கை போன்ற நாடுகள் பெரும்பாலும் விவசாய நாடுகளாக காணப்படும்.

அந்த வகையில் தற்பொழுது எமது நாடு விவசாயம், கைத்தொழில் என இரண்டையும் சமாந்தரமாக முன்னெடுத்து செல்வதே இப்போதுள்ள தெரிவு ஆகும். கடந்த மே 11 ஆந் திகதியிலிருந்து முடக்கப்பட்ட நாட்டின் பெரும்பகுதி தளர்த்தப்பட்டு சிரமமான முறையில் செயற்பாடுகள் தொடங்கியுள்ளன. இருந்த பொழுதிலும் விமானப் போக்குவரத்துக்கள் மற்றும் சுற்றுலாத்துறை என்பன மறு அறிவித்தல் வரை முடக்கப்பட்டுள்ளது. இலங்கையில் பெரும்பகுதி கடலினால் ஆக்கப்பட்ட பகுதியாகும். இங்கு மீனவ சமூகம் மீன்பிடித் தொழிலை செய்து அதனை ஏற்றுமதி செய்வதன் ஊடாக வருமானம் ஈட்டி வந்த நிலையில் கொரோனா தொற்று காரணமாக பிடிக்கப்படும் கடலுணவுகள் ஏற்றுமதி செய்ய முடியாமல் மிகவும் பாதிக்கப்பட்ட நிலையில் மீனவ சமூகம் காணப்படுகின்றது.

இந்த ஏற்றுமதியினால் இலங்கைக்கு அதிகளவான வெளிநாட்டு வருமானம் கிடைத்தது. விவசாயத்தில் பெரும் பகுதி வடகிழக்கு மற்றும் மலையகப் பகுதிகளில் உற்பத்தி செய்யப்படும் மரக்கறிகள் பல ஏற்றுமதி செய்யப்பட்டன. பெருந்தோட்ட பயிர்களான தேயிலை, தெங்கு, இறப்பர் போன்ற பொருட்கள் வெளிநாடுகளில் நல்ல வரவேற்பை பெற்றதுடன் இலங்கையின் பொருளாதாரத்தில் பெரும் பங்கு வகித்தன. ஒருவாறு முடக்க நிலை நீக்கப்பட்டு விவசாய பெருந்தோட்ட செய்கைகள் ஆரம்பிக்கப்பட்ட நிலையில் பனையால் விழுந்தவனை மாடேறி மிதிப்பது போல் அம்பன் சுறாவளி தாக்கத்தால் மலையகப்பகுதி மிகவும் பாதிக்கப்பட்டுள்ளது. பல விவசாயப் பகுதிகள் வெள்ளத்தால் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளது. பல இடங்களில் மண்சரிவுகள் ஏற்பட்டுள்ளதுடன் பல உயிரிழப்புக்களும் ஏற்பட்டுள்ளன. பல இடங்களில் மக்கள் இடம் பெயர்ந்து சென்றுள்ளனர். நாட்டின் பெரும் வருமானப் பகுதியான இரத்தினக்கல் உற்பத்தி செய்யப்படும் மாவட்டமான இரத்தினபுரி



மிகவும் பாதிக்கப்பட்டுள்ளது.

கொரோனா வைரசின் தாக்கம் முடிவடைந்தாலும் பொருளாதார ரீதியான நெருக்கடி அதிகரித்து செல்லும் என்பதில் ஐயமில்லை. இப்பொழுது ஏற்பட்டுள்ள நெருக்கடியை அதன் அண்மைய போக்கு மக்களின் தலையின் மேல் அரசு சுமத்த முயலும். எவ்வாறெனில் அத்தியாவசியப் பொருட்களின் வரியை அதிகரிப்பதன் ஊடாகவும் இறக்குமதி வரியின் ஊடாகவும் அவற்றை மக்களின் தலையில் சுமத்த முயற்சிக்கலாம். இதனால் வரும் காலங்களில் மக்கள் மிக மோசமான சூழ்நிலைகளை சந்திக்கலாம். நடுத்தர வர்க்கத்தினர் இதனால் மிகவும் பாதிப்படைவார்கள். அன்றாட கூலித் தொழில் செய்பவர்கள் மிகவும் பரிதாபமான நிலைக்கு செல்வதுடன் மிக விரைவில் பட்டினிச்சாவை எதிர் கொள்ள வேண்டிய சூழ்நிலை உருவாகலாம். இதனை உலக சுகாதார அமைப்பு, உலக பொருளாதார அமைப்பு, உலக வங்கி என்பன எச்சரித்துள்ளன.

இவ்வாறான ஒரு நெருக்கடியான சூழலில் இருந்து மக்கள் தங்களை பாதுகாத்துக் கொள்ள தன்னிறைவு விவசாயத்திட்டத்தை மேம்படுத்தல் ஊடாக பட்டினிச்சாவை தடுக்கலாம். ஒவ்வொரு மக்களும் தங்கள் தங்கள் வீடுகளிலே தோட்டங்களை செய்வதுடன் அதனை கிராம ரீதியாக விஸ்தரிப்பதுடன் பின்னர் மாவட்ட ரீதியாக மேம்படுத்தல் வேண்டும். இவ்வாறு மாவட்டங்களுக்கிடையில் தன்னிறைவு பொருளாதாரம் ஒன்று காணப்படும் பட்சத்தில் பொருளாதார நெருக்கடியை ஓரளவு சமாளிக்க முடியும். அத்துடன் அரசும் மானிய ரீதியாக ஊக்குவிப்பு கடன்களை வழங்கி விவசாய ஊக்குவிப்பை மேம்படுத்த வேண்டும். சிறு கைத்தொழில் புரிவோரை ஊக்கப்படுத்தல் இவ்விடத்தில் ஒரு விடயத்தை பகிர வேண்டும். 2ஆம் உலக யுத்தம் கோரமாக இடம்பெற்ற பொழுது ஜேர்மன் உலக நாடுகளை ஆக்கிரமித்து கொண்டு சென்ற பொழுது சோவியத் யூனியனை (ரஷ்யா) ஆக்கிரமிக்க முயற்சி எடுத்தது. சோவியத் யூனியனுக்குள் ஜேர்மன் படை புகுந்தது. அப்பொழுது ரஷ்யாவில் ஜனாதிபதியான ஸ்டாலின் தனது நாட்டு மக்களைஆண்பெண்என்றுபாகுபாடின்றி அனைவரையும் வைத்து தொழிற்சாலைகளை இயக்கி ஆயுதங்களை உற்பத்தி செய்ததுடன் இன்னோர் பகுதி மக்களை இரவு பகல் பாராமல் விவசாயம் செய்யச் சொல்லி அச் சூழ்நிலையில் வெற்றி கொண்டனர். ஒட்டுமொத்த சோவியத் யூனியன் மக்களும் ஒன்று திரண்டு ஏற்பட இருந்த பொருளாதார பட்டினிச்சாவை முறியடித்தனர். அதே போல் எம் நாட்டிலும் மக்கள் அனைவரும் இணைந்து வரவிருக்கும் பொருளாதார நெருக்கடியில் இருந்து மீள ஒன்றிணைய வேண்டியது மிக அவசியமே.

ஏனெனில் சுமார் 7 வருடங்கள் நடைபெற்ற 2ஆம் உலகப் போரில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியிலும் பார்க்க இப்பொழுது உலகம் சந்திக்கும் பொருளாதார நெருக்கடியானது மிகப் பாரதூரமானது. உலகப் போரானது ஒருகால கட்டத்துடன் நிறைவடைந்தது. ஆனால் கொரோனா வைரஸ் உலகை விட்டு அப்புறப்படுத்தும் நாள் யாருக்கும் தெரியாது. இன்னும் எவ்வளவு காலம் இதன் பாதிப்பு தொடரும் என கூறமுடியாது என உலக சுகாதார அமைப்பு கூறியுள்ளது. அரசு பொருளாதார நெருக்கடியில் இருந்து மீள சில அதிரடி நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டும். சகல அரச ஊழியர்களின் சம்பளத்தில் இருந்து ஒரு சிறு தொகையினை வரும் ஆறுமாத காலத்துக்கு அறவிட்டு அதனை பொருளாதார அபிவிருத்திக்கு பயன்படுத்துவதோடு நிலைமை சீராகிய பின்னர் அறிவிட்ட தொகையினை அரச ஊழியர்களுக்கு மொத்தமாக திருப்பி வழங்கலாம். அத்துடன் கோரிக்கை வரிகளை அதிகப்படுத்தலாம். வெளி நாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்படும் ஆடம்பர பொருட்களுக்கான வரியினை சில காலத்துக்கு அதிகரிக்கலாம். கைத்தொழில் ஏற்றுமதி பொருட்களின் ஏற்றுமதியினை அதிகரிக்கலாம். சிறு கைத்தொழில் துறையினை ஊக்கப்படுத்துவதுடன் ஆடம்பரச் செலவுகளை குறைத்தல் போன்றவற்றின் ஊடாக வரவிருக்கும் பொருளாதார நெருக்கடியை கட்டுப்படுத்தலாம். எனவே எமது நாட்டின் பொருளாதார நெருக்கடியை நாமே மீட்போம் என இன, மத, மொழி பேதமின்றி ஒருங்கே எழுந்து திடசங்கற்பம் புணுவோமாக.

*தாயகத்தான்*

# சிங்கள இனவாத அரசின் ஆயுதப் பயங்கரவாதத்திலிருந்து எமது மக்களைப் பாதுகாக்கவே நாம் ஆயுதமேந்த நிர்ப்பந்திக்கப்பட்டோம்

## வரலாற்றை விளங்கிக் கொண்டு தமிழ் அரசியல் தலைமைகள் செயற்பட வேண்டும்



இந்த நிலத்தில் புதையுண்டிருக்கும் ஆயிரமாயிரம் சமாதிக் கற்களும் விடுதலையையே குறியீடு செய்து நிற்கின்றன. வீதிகளில், சந்துகளில், சுவர்களில் நாம் சந்திக்கும் மாவீரர்களது திருவுருவங்களும் விடுதலையின் சாட்சிகளாகவேஎமக்குக்காட்சிதருகின்றன. ஒரு புனித இலட்சியத்திற்காக வாழ்ந்து, அந்த இலட்சியத்திற்காகப் போராடி, அந்த இலட்சியத்தை அடைவதற்காகத் தமது வாழ்வைத் தியாகம் செய்த மாவீரர்கள் மகத்தானவர்கள்.ஒரு விடுதலை வீரனின் சாவு ஒரு சாதாரண மரண நிகழ்வல்ல அந்தச் சாவு ஒரு சரித்திர நிகழ்வு ஒரு உன்னத இலட்சியம் உயிர் பெறும் அற்புதமான நிகழ்வு. உண்மையில் ஒரு விடுதலை வீரன் சாவதில்லை அவனது உயிராக இயங்கி வந்த இலட்சிய நெருப்பு என்றுமே அணைந்துவிடுவதில்லை. அந்த இலட்சிய நெருப்பு ஒரு வரலாற்றுச் சக்தியாக மற்றவர்களைப் பற்றிக்கொள்கின்றது ஒரு இனத்தின் தேசிய ஆன்மாவைத் தட்டியெழுப்பிவிடுகின்றது. சாவுக்கும் அஞ்சாத வீரத்திற்கும், ஈகத்திற்கும், இலட்சியப் பற்றிற்கும் எமது மாவீரர்களுக்கு நிகர் எவருமேயில்லை என நான் பெருமிதத்துடன் கூறுவேன்.

தமிழ் மக்களின் சுதந்திரத்திற்காகவும், கௌரவத்திற்காகவும், பாதுகாப்பிற்காகவும் தமது இன்னுயிரை அர்ப்பணித்துள்ள மாவீரர்களான தியாகிகள், காலங்காலமாக எமது இதயக்கோவிலில் பூசிக்கப்பட வேண்டியவர்கள்.

புயலாக எழுந்த பேராபத்துக்களை எல்லாம் மலையாக நின்று எதிர்கொள்ள, இரும்பையொத்த மனவுறுதி எனக்குத் தேவைப்பட்டது. இந்தச் சோதனை மிகுந்த நெருக்கடியான வரலாற்றுக் கட்டங்களில் எனக்குப் பக்கபலமாக – மனித மலைகளாக – உறுதியோடு நின்ற மாவீரர்களை, நான் என்றும் மறக்க முடியாது. இந்த இலட்சிய வேங்கைகளில் தளராத உறுதிதான் எமது சுதந்திர இயக்கத்தின் தூண்களாக நிற்கின்றன.

இரும்பையொத்த இலட்சிய உறுதியுடனும், எதையும் தாங்கும் இதயத்துடனும், சாவுக்கு அஞ்சாத வீரத்துடனும் எமது வீரர்கள் போராடினார்கள் போர்க்களத்தில் வீரமரணத்தைத் தழுவினார்கள்.

எந்த ஒரு தேசத்திலும் எந்த ஒரு காலத்திலும் நிகழாத அற்புதமான அர்ப்பணிப்புக்களை எமது மண்ணிலே எமது மண்ணுக்காக எமது மாவீரர்கள் புரிந்திருக்கிறார்கள்.

எமக்கு ஒரு நாடு வேண்டும் , எமது மக்களுக்கு விடுதலை வேண்டும் , எமது இனம் சுதந்திரமாக வாழவேண்டும் என்ற ஆக்கிரோசமான இலட்சிய வேட்கையுடனே, மாவீரர்கள் களத்தில் விழுகிறார்கள் எனவே எமது மாவீரர்கள் ஒவ்வொருவரது சாவும் எமது நாட்டின் விடுதலையை முரசறையும் வீரசுதந்திரப் பிரகடனமாகவே சம்பவிக்கின்றது.

எமக்கு ஒரு நாடு வேண்டும் எமது மக்களுக்கு விடுதலை வேண்டும் எமது இனம் சுதந்திரமாக வாழ வேண்டும் என்ற ஆக்ரோசமான இலட்சிய வேட்கையுடனேயே மாவீரர்கள் களத்தில் விழுகிறார்கள். எனவே எமது மாவீரர்கள் ஒவ்வொருவரது சாவும் எமது நாட்டின் விடுதலையை முரசறையும் வீர சுதந்திரப் பிரகடனமாகவே சம்பவிக்கிறது.

எமது தாயக தேசத்தின் விடுதலைக்காக ஆயிரமாயிரம் புலி வீரர்கள் களமாடி வீழ்ந்தார்கள். எமது வீர மண்ணின் மார்பைப் பிளந்து அந்த வீரர்களைப் புதைத்தோம். உயிரற்ற சடலங்களாக அவர்கள் மண்ணிற்குள் மறையவில்லை. விடுதலையின் விதைகளாகவே எமது தாயின் மடியில் அவர்களைப் புதைத்தோம். வரலாற்றுத்தாய் அவர்களை அரவணைத்துக் கொண்டாள். ஆயிரமாயிரம் தனிமனித உயிர்கள் சரித்திரத்தின் கருவூலத்தில் சங்கமித்தன. அவ்வுயிர்கள் கருவாகி, காலத்தால் உருவம்பெற்று, தேசத்தின் சுதந்திரமாக வடிவம் பெற்று வருகிறது. தமிழீழம் என்ற அந்த சுதந்திர தேசம் வரலாற்றின் குழந்தையாக விரைவில் பிறப்பெடுக்கும்.

எமது மண்ணிலே, எமது காலத்திலே எமது கண்முன்னே வீரத்திற்கு இலக்கணமாக வாழ்ந்து, விடுதலையின் வித்தாக வீழ்ந்தவர்கள் எமது மாவீரர்கள். எதிரிக்குத் தலைவணங்காத வணங்காமன்னர்கள். எமது தேசவிடுதலைக்காகக் களமாடி வீழ்ந்த மாவீரர் அனைவரும் மனித மலைகளாக, மனிதக் கோட்டைகளாகவே எமது மண்ணைக் காத்து நிற்கின்றனர்.

எமது மாவீரர்கள் இந்த மண்ணை ஆழமாக நேசித்தார்கள். தாயக விடுதலைக்காகத் தமது கண்களைத் திறந்த கணம் முதல் நிரந்தரமாக மூடிய கணம் வரை அவர்கள் புரிந்த தியாகங்கள் உலக வரலாற்றில் ஒப்பற்றவை.

எமது வீர சுதந்திர வரலாறு மாவீரர்களின் இரத்தத்தாலும் வியர்வையாலும், கண்ணீராலும் எழுதப்பட்டிருக்கின்றது. ஒரு புனித யாத்திரையில் அவர்கள் போனார்கள். கண்ணீர் வடித்து நிற்கும் எமது மக்களுக்கு ஒரு புதிய வாழ்வு பிறக்கும் என்ற அசையாத நம்பிக்கையில். அந்தத் தியாகப் பயணத்தைத் தொடர்ந்தார்கள். அந்தப் புனிதர்களை எண்ணும் போதெல்லாம் எனது நெஞ்சு புல்லரிக்கும்.

சத்தியத்திற்காகச் சாகத் துணிந்து விட்டால் ஒரு சாதாரண மனிதப் பிறவியும் சரித்திரத்தைப் படைக்க முடியும்.

தமிழர் வரலாற்றில் என்றோ மாண்டுபோன வீரமரபு மீண்டும் மறுபிறப்பு எடுத்தது அடிமைத்தனத்தின் அமைதியைக் கலைத்துக் கொண்டு ஒரு புயல் எழுந்தது. சருகாக நெரிபட்ட தமிழன்,மலையாக எழுந்து நிமிர்ந்தான் அடிமை விலங்குகளால் பிணைக்கப்பட்டு, நீண்ட நெடுங்காலமாகத் தூங்கிக்கொண்டிருந்த தமிழ்த் தேசம் விழித்துக்கொண்டது. இந்தத் தேசிய எழுச்சிக்கு மூச்சாக இருப்பவர்கள் எமது மாவீரர்கள்.

நாம் ஒரு இலட்சிய விதையை விதைத்திருக்கின்றோம் அதற்கு எமது வீரர்களின் இரத்தத்தைப் பாய்ச்சி வளர்க்கின்றோம். இந்த விதை வளர்ந்து விருட்சமாகி எமது மாவீரர்களின் கனவை நனவாக்கும்.

மண்ணின் மைந்தர்களான மாவீரர்களைப் பெற்றெடுத்த பெற்றோர்களையும் நான் போற்றுகின்றேன். உங்களது குழந்தைகள் தமது உயிருக்கும் மேலாக தமது தாய்நாட்டின் சுதந்திரத்தை நேசித்தார்கள். இந்த உத்தமமானவர்களை ஒரு புனித இலட்சியத்திற்கு உவந்தளித்த பெற்றோராகிய நீங்கள் நிச்சயம் பெருமை கொள்ள வேண்டும். உங்களது குழந்தைகள் சாகவில்லை சரித்திரமாகி விட்டார்கள்.

இந்த மண்ணின் மைந்தர்களைப் பெற்றெடுத்த பெற்றோர்களே! உங்கள் குழந்தைகள் தமது உயிருக்கு மேலாக தாய் நாட்டின் சுதந்திரத்தை நேசித்தார்கள். இந்த உத்தமமானவர்களை ஒரு புனித இலட்சியத்திற்கு உவந்தளித்த பெற்றோராகிய நீங்கள் நிச்சயம் பெருமை கொள்ளவேண்டும். உங்களது குழந்தைகள் சாகவில்லை சரித்திரமாகிவிட்டார்கள்.

மாவீரர் நாள் எமது தேசத்தின் துக்கதினம் அல்ல நாம் கண்ணீர் சிந்திக் கவலை கொள்ளும் சோக தினமும் அல்ல. இன்றைய நாள், ஒரு தேசிய எழுச்சி தினம் எமது தேசம் சுதந்திரம் வேண்டி உறுதி பூணும் புரட்சித் தினம்.

மாவீரர்களது அற்புதமான இலட்சிய வாழ்க்கை , அவர்களது தியாகங்கள், அவர்கள் அனுபவித்த துன்பதுயரங்கள், ஏக்கங்கள், அவர்கள் கண்ட கனவுகள் , இவை எல்லாவற்றினதும் ஒட்டுமொத்த வெளிப்பாடாகவே எமது போராட்ட வரலாறு முன்னேறிச் செல்கின்றது.

மாவீரர்களின் சாவுகள், எமது சரித்திரத்தையே இயக்கும் உந்து சக்தியாக, எமது போராட்டத்தின் உயிர்மூச்சாக, எமது போராளிகளின் உறுதிக்கு உத்வேகமளிக்கும் ஊக்கு சக்தியாக , அமைந்துவிட்டன.

மாவீரர்களே! உங்கள் தியாகத்தால் எங்கள் தேசியம் உருவாக்கம் பெறுகின்றது உங்கள் நினைவுகளால் எங்கள் உறுதி வைரம் பெறுகின்றது.

மாவீரர்கள் ஒரு சத்திய இலட்சியத்திற்காக மரணிக்கிறார்கள். அவர்களது சாவு, சாதாரண மரண நிகழ்வு அல்ல எமது தேச விடுதலையின்ஆன்மீக அறைகூவலாகவே மாவீரர்களது மரணம் திகழ்கிறது.

மாவீரர்கள் காலத்தால் சாகாத சிரஞ்சீவிகள், சுதந்திரச்சிற்பிகள், எமது மண்ணில் ஒரு மாபெரும் விடுதலை எழுச்சிக்கு வித்திட்டுச் சென்ற வீர மறவர்கள்.

மாவீரர்கள் மகத்தான இலட்சியவாதிகள் தாம் தழுவிக்கொண்ட இலட்சியத்தைத் தம் உயிரிலும் மேலாக நேசித்தவர்கள் மக்களின் விடுதலையை தமது மானசீக இலட்சியமாக, வாழ்வின் உயரிய குறிக்கோளாக வரித்துக்கொண்டவர்கள் அந்த இலட்சியத்திற்காகவே மடிந்தவர்கள். மாவீரர்கள் காலத்தால் சாவதில்லை அவர்கள் காலத்தை உருவகிப்பவர்கள்.

எமது மாவீரர்கள் மகத்தான மனிதப் பிறவிகள் அவர்களது வாழ்வும் வரலாறும் எமது வீர விடுதலைக் காவியத்தின் உயிர் வரிகள்.

7 ஆம் பக்கம் பார்க்க...
இரணியன்

6ஆம் பக்க தொடர்ச்சி...

மாவீரர்களே எமது மண்ணின் காப்பரண்கள் எமது மக்களின் காவற்தெய்வங்கள்.

விடுதலை என்பது ஒரு அக்கினிப்பிரவேசம் நெருப்பு நதிகளை நீந்திக் கடக்கும் நீண்ட பயணம் தியாகத்தின் தீயில் குதிக்கும் யாகம். இந்த விடுதலை வேள்விக்கு தமது உயிரை ஈகம் செய்தவர்கள் மாவீரர்கள்.

போராளிகள், தனிமனிதர்கள் அல்ல, அவர்கள் ஒரு இனத்தின் காவலர்கள். அந்த இனத்தின் வழிகாட்டிகள் ஒரு புதிய வரலாற்றைப் படைக்கும் சிருஸ்டிகர்த்தாக்கள். இவர்களது வீரச்சாவுகள் வெறும் மரணநினைவுகள் அல்ல, இவர்களது நினைவுகள் வரலாற்றுச் சின்னமாக என்றென்றும் நிலைத்து நிற்கவேண்டும். இந்த தியாகச் சின்னங்கள் எமது மக்களின் மனதில் காலங்காலமாக விடுதலை உணர்வை ஊட்டிக் கொண்டேயிருக்கும். மாவீரர்களின் கல்லறைகள் மக்களின் உள்ளத்தில் சுதந்திரச் சுடரை ஏற்றும் நெருப்புக்கிடங்குகள் ஆகும்.

இது கரும்புலிகள் சகாப்தம். இடியும் மின்னலுமாகப் புலிகள் போர்க்கோலம் பூண்டுவிட்ட காலம். இந்தப் புதிய யுகத்தில் எமது போராட்டம் புதிய பரிமாணங்களில் விரியும். சாவுக்கு விலங்கிட்ட மறவர்கள் புதிய சரித்திரம் படைப்பார்கள். எமது சந்ததியின் விடிவுக்கு விளக்கேற்றி வைப்பார்கள்.

கப்டன் மில்லருடன் கரும்புலிகள் சகாப்தம் ஆரம்பமாகியது என்றுமே உலகம் கண்டிராத , எண்ணிப் பார்க்கவும் முடியாத, தியாகப் படையணி ஒன்று தமிழீழத்தில் உதயமாகியது.

கரும்புலி என்ற சொற்பதத்தில் கருமையை மனோதிடத்திற்கும், உறுதிப்பாட்டிற்குமே நாம் குறிப்பிடுகின்றோம். இன்னொரு அர்த்தபரிமாணத்தில் இருளையும் அது குறியீடு செய்யும் பார்வைக்குப் புலப்படாத, பூடகமான, இரகசியமான தன்மையையும் செயற்பாட்டையும் அது குறித்து நிற்கும். எனவே, கரும்புலி என்ற சொல் பல அர்த்தங்களைக் குறிக்கும் ஆழமான படிமமாக அமையப்பெற்றிருக்கின்றது.

கரும்புலி வீரர்கள் பலர் இன்று பெயர் குறிப்பிடப்படாத கல்லறைகளில் அநாம தேயமாக உறங்கிய போதும், அவர்களது அற்புதமான சாதனைகள் வரலாற்றுக் காவியங்களாக என்றும் அழியாப் புகழுடன் வாழும்.

கரும்புலிகள் எமது இனத்தின் தற்காப்புக் கவசங்கள் , எமது போராட்டப்பாதையின் தடைநீக்கிகள் , எதிரியின் படை பலத்தை மனபலத்தால் உடைத்தெறியும் நெருப்பு மனிதர்கள்.

பலவீனமான எமது மக்களின் மிகவும் பலம்வாய்ந்த ஆயுதமாகவே, கரும்புலிகளை நான் உருவாக்கியுள்ளேன்.

மற்றவர்கள் இன்புற்றிருக்க வேண்டும் என்பதற்காக தன்னை இல்லாதொழிக்கத் துணிவது தெய்வீகத் துறவறம். அந்தத் தெய்வீகப் பிறவிகள் தான் கரும்புலிகள்.

கரும்புலி வீரர்கள் பற்றி இன்று முழு உலகமும் பேசுகிறது. அவர்களது மகத்தான தியாகத்தைக் கண்டு மலைத்துப் போய் நிற்கிறது. பூகம்ப அதிர்வாகக் குமுறும் எமது போராட்டத்தின் உக்கிரத்தை உலக சமுதாயத்திற்கு உணர்த்தியவர் கரும்புலிகள்.

ஒரு கரும்புலி வீரன் தன்னைவிட தனது இலட்சியத்தையே காதலிக்கிறான். தனது உயிரைவிட தான் வரித்துக்கொண்ட குறிக்கோளையே நேசிக்கிறான். அந்த குறிக்கோளை அடைவதற்கு தன்னை அழிக்கவும் அவன் தயாராக இருக்கிறான். அந்த குறிக்கோள் அவனது சுயத்திற்கு அப்பால் நிற்கும் மற்றவர்களின் நலன் பற்றியது, நல்வாழ்வு பற்றியது.

கரும்புலிகள் வித்தியாசமானவர்கள், அபூர்வமான பிறவிகள், இரும்பு போன்ற உறுதியும் பஞ்சு போன்ற நெஞ்சமும் ஆகாண்டவர்கள். தங்களது அழிவில் மக்களது ஆக்கத்தைக் காணும் ஆழமான மக்கள் நேயம் படைத்தவர்கள்.

அறிவின் அதி உயர்ந்த பண்பாகப் பிறப்பது தான் எளிமை தன்னலமும் தற்பெருமையும் அகன்ற நற்பண்பாக எளிமை தோன்றுகிறது. இந்த எளிமை ஒருவரை அழகான மனிதராக, பண்பான மனிதராக ஆக்கிவிடுகிறது.

இன்றைய காலத்தின் தேவைக்கேற்ப , வரலாற்று ஓட்டத்திற்கு அமைய கலை இலக்கிய கர்த்தாக்கள் புதுமையான, புரட்சிகரமான படைப்புக்களைச் சிருஷ்டிக்க வேண்டும். இந்தப் படைப்புக்கள் எமது புனித விடுதலைப் போராட்டத்திற்கு உரமூட்டுவதாக அமைய வேண்டும் சமூகப் புரட்சிக்கு வித்திடுவதாக அமைய வேண்டும். இளமையிலிருந்து தான் ஒருவனை முழுமையாக வளர்க்க முடியும். முழுமை எனும் பொழுது அறிவும், ஆற்றலும், அறநெறிப் பண்புகளும் கொண்ட நிறைவான மனித வளர்ச்சியைக் குறிப்பிடுகின்றேன்.

எமது இனத்தின் வாழ்வுக்கும் வளர்ச்சிக்கும் கல்வி ஆதாரமானது எமது சமூகத்தின் முன்னேற்றத்துக்கு அடித்தளமானது. நீண்ட காலமாகவே, எமது கல்விவாழ்வைச் சிதைத்துவிட எதிரியானவன் முனைந்து வருகிறான் இதனால் தமிழரின் கல்வி பாரதூரமான அளவிற்குப் பாதிக்கப்பட்டிருக்கிறது. எமது தேசிய வாழ்வின் சகல பரிமாணங்களிலும் வியாபித்து நிற்கும் ஒரு வரலாற்று இயக்கத்திலிருந்து கலைஞர்களும் அறிஞர்களும் அந்நியப்பட்டு நிற்க முடியாது.

எமது பண்பாடுதான் எமது தேசத்தின் உயிர் எமது இனத்தின் ஆன்மா. எமது போராட்ட வாழ்வின் உண்மைகளைக் கலை இலக்கியப் படைப்புக்கள் தரிசித்து நிற்க வேண்டும். எமது சமூக வாழ்வியக்கத்தின் சகல பரிமாணங்களிலும் ஆழமாக ஊடுருவி நிற்கும் இன ஒடுக்குமுறையின் கொடூரத்தினை, சிருஸ்டிகர்த்தாக்கள் சித்தரித்துக் காட்டவேண்டும். எமது மொழியில், எமது கலைகளில், எமது பண்பாட்டில், எமது மண்ணில் நாம் கொள்ளும் பாசமும் நேசமும் தேசியப் பற்றுணர்வாகப் பரிணாமம் பெறுகின்றன. எமது மொழியும் , கலையும் பண்பாடும் எமது நீண்ட வரலாற்றில், விழுதுகளாக எமது மண்ணில் ஆழமாக வேரூன்றி நிற்பவை எமது தேசிய வாழ்விற்கு ஆதாரமாக நிற்பவை. எமது விடுதலைப் போராட்டம் கல்விக்குக் கவசமாக இருப்பது போல, கல்வியும் எமது போராட்டத்திற்குக் காப்பரணாக நிற்க வேண்டும்.

கலாசாரம் உயர்நிலை எய்தும் பொழுதே ஒரு இனம் மகிமை பெறுகின்றது மனிதவாழ்வு உன்னதம் பெறுகின்றது. மனிதம் வளர்ச்சி பெறுகின்றது. கலாச்சாரம் என்ற கோலத்தில் எமது சமூக வாழ்வில் ஊடுருவி நிற்கும் பிற்போக்கான பண்புகளை, வழக்கங்களை, கருத்தோட்டங்களை நாம் இனங்கண்டு களைதல் அவசியம். கலை இலக்கியப் படைப்புகள் மக்களைச் சிந்திக்கத் தூண்டவேண்டும் பழமையிலும் , பொய்மையிலும், பல்வேறு மாயைகளிலும் சிறைபட்டுக் கிடக்கும் மக்களது மனதில் புரட்சிகரப் பார்வையைத் தோற்றுவிக்க வேண்டும் மாறிவரும் சமூக விழிப்புணர்வை உருவாக்க வேண்டும். கலைத்துறையில் சர்வாதிகாரம் இருக்கக்கூடாது அப்படி இருந்தால் அது வளராது. கல்வி எனும் மூலாதார உரிமையைப் பறித்தெடுத்து, தமிழீழத்தின் கல்வித்துறையைச் சிதைத்துவிட, சிங்களப் பேரினவாதம் நீண்டகாலமாகவே முயன்று வருகின்றது. கல்வியும், மொழியும், பண்பாடும், நிலமும் எமது இனக்கட்டமைப்பை தாங்கி நிற்கும் தூண்கள். இந்தத் தூண்களைத்தகர்த்துவிட எதிரி முனைகிறான். இனத்தனித்துவத்தை அழிப்பது அவனது நோக்கம். கல்வியும், மொழியும், பண்பாடும், நிலமும் எமது இனக்கட்டமைப்பைத் தாங்கி நிற்கும் தூண்கள். காலத்தின் மூச்சாக வாழ்வியக்கம் அசைகின்றது. அந்தக் காலத்தையும் அந்த வாழ்வாக அவிழும் மனித இன்னல்களையும் விளைச்சல்களையும் நுட்பமாகச் சித்தரிக்கும் கலை, இலக்கியங்கள் உன்னதமானவை. சமூகப் புரட்சி என்பது கலாசார மறுமலர்ச்சியை உள்ளடக்கக் கூடியதாக முன்னெடுக்கப்பட வேண்டும் என்பதே எனது கருத்து.

தமிழீழ தேசிய விடுதலைப் போராட்டத்தின் உயரிய நோக்குகளையும் இலக்குகளையும் மாணவசமூகம் புரிந்துகொள்ள வேண்டும். இந்தப் புரிந்துணர்வை வளர்த்து, மாணவரிடையே தேசிய விழிப்புணர்வை ஏற்படுத்த ஆசிரிய சமூகம் முயற்சிக்க வேண்டும். தான் பிறந்த மண், தான் வாழ்ந்த சூழல், தான் வாழும் காலம் என்ற ரீதியில் வாழ்க்கையே ஒரு கலைஞனது படைப்புத்தளமாக அமைகின்றது வாழ்வின் புறநிலை உண்மைகளை மூலப்பொருளாக எடுத்து கலைப்பொருள் படைப்பவனே சிறந்த கலைஞன்.

நான் கலை இலக்கியங்களை மதிப்பவன் கலை இலக்கியப் படைப்பாளிகளை கௌரவிப்பவன் கலை கலைக்காக அல்லாமல் மக்களுக்காகவே படைக்கப்பட வேண்டும் என்ற கருத்தைக் கொண்டவன். நாம் சுதந்திர மனிதர்களாக, எமது தலைவிதியை நாமே நிர்ணயிக்கும் உரிமை பெற்றவர்களாக, இறைமை பெற்றவர்களாக இருந்தால்தான், கல்வி உட்பட சகல சமூக அமைப்புக்களையும் ஒரு உன்னதமான வளர்ச்சிப் போக்கில் உயர்நிலைக்கு நகர்த்திச் செல்ல முடியும்.

பழையன கழிந்து புதியன சேர்ந்து செழுமைப்படும் கலை, கலாச்சாரம், பண்பாடு எமது இனத்திற்குப் பெருமை சேர்க்கும் எமது மக்களின் மனவுலகில் ஒரு புரட்சிகரமான விழிப்புணர்வைத் தோற்றுவிக்கும். போரும் , கல்வியும் இணைந்த வாழ்வு இன்று எமது வரலாற்றுத் தேவையாக உள்ளது.

மக்களிடையே விழிப்புணர்வையும், எதிர்ப்புணர்வையும், விடுதலை உணர்வையும் தூண்டிவிடும் கலை இலக்கிய ஆக்கங்களே எமது இலட்சியப் போருக்கு உரமேற்றுவதாக அமையும் இத்தகைய கலை, இலக்கியப் படைப்புக்களே தேசிய எதிர்ப்பியக்கத்திற்கு உரமூட்டுவதாக அமையும்.

மொழி, கலை, கலாச்சாரம் என்பன ஒரு தேசிய இனத்தின் கட்டமைப்பிற்குத் தூண்களாக விளங்குகின்றன ஒரு தேசியத்தின் ஆன்மாவாகத் திகழ்கின்றன ஒரு தேசிய நாகரிகத்திற்கு அத்திவாரமாகின்றன. மொழியும் கலையும் கலாசாரமும் வளம்பெற்று, வளர்ச்சியும், உயர்ச்சியும் அடையும் பொழுதே தேசிய இனக் கட்டமைப்பு இறுக்கம் பெறுகின்றது (பலம் பெறுகின்றது) மனித வாழ்வும் சமூக உறவுகளும் மேன்மை பெறுகின்றன தேசிய நாகரீகம் உன்னதம் பெறுகின்றது. விடுதலைப் போராட்டத்திலிருந்து கலைஞர்களும், அறிஞர்களும் அந்நியப்படுவது, மக்களிலிருந்தும் வாழ்க்கையின் நிதர்சனத்தில் இருந்தும் அந்நியப்படுவதாக முடியும்.

எதிரியின் அழிப்பு வேலைகளுக்கு மத்தியில் நாம் ஆக்க வேலைகளைச் செய்து வருகின்றோம். போர்ச்சூழலால் குடும்பம் சிதைந்து, அநாதரவான நிலைக்கு ஆளாகும் சிறார்களை எமது இயக்கம் அரவணைத்துக் கொள்கிறது. அவர்களைச் சிறந்த முறையில் வளர்த்தெடுக்கப் பராமரிப்பு இல்லங்களையும், பயிற்சிப் பள்ளிகளையும் நடத்தி வருகிறது தமிழீழத்தின் எதிர்காலத் தலைவர்களாக, அறிவுஜீவிகளாக, சமூக நிர்மாணிகளாக இவர்களை வளர்த்தெடுப்பதே எமது நோக்கம். அனைத்துத் தமிழ் மக்களும் ஒரே இனம் என்ற தேசாபிமான உணர்வுடன் போராட்டத்தில் பங்கு கொண்டால், எமது விடுதலை இலட்சியம் வெற்றி பெறுவது நிச்சயம். அரசியல் என்பது மக்கள் மீது ஆட்சியை நடாத்தும் அல்லது அதிகாரத்தைச் செலுத்தும் விவகாரம் அல்ல. அரசியல் என்பது மக்களுக்குச் சேவை புரியும் பணி மக்களின் நல்வாழ்வுக்கு ஆற்றப்படும் தொண்டு.

இந்த யுத்தத்தில் எமது போராளிகளும் பொதுமக்களும் செய்துள்ள அற்புதமான தியாகங்கள், உலக வரலாற்றில் ஓர் ஒப்பற்ற வீரகாவியமாகப் பொறிக்கப்பட்டுவிட்டது. இன அழிவில் இருந்து எமது மக்களைப் பாதுகாத்து தேசிய சுதந்திரத்தை முன்னெடுப்பதாயின், எமது தாய்ப்பூமியை ஆக்கிரமித்திருக்கும் எதிரிப் படைகளை விரட்டியடிக்க வேண்டும். இந்தக் கைங்கரியமானது தீர்க்கமான, திட்டமிடப்பட்ட ஆயுதப் போராட்டத்திலும் எமது மக்களின் ஏகோபித்த பங்களிப்பிலும் தங்கியிருக்கிறது. இலட்சியத்தால் ஒன்றுபட்டு எழுச்சிகொண்ட மக்களை எந்த ஒரு சக்தியாலும் ஒடுக்கிவிட முடியாது. இலட்சியத்தில் ஒன்றுபட்டு உறுதிபூண்ட மக்களே வரலாற்றைப் படைப்பார்கள்.

இளைஞர்கள் இருக்கிறார்கள் அவர்கள் போராடித் தமிழீழம் பெறுவார்கள் என்ற வகையில் நாம் சும்மா இருந்துவிட்டால், எமக்குச் சுதந்திரம் கிடைக்காது. பொதுமக்களாகிய உங்களின் நேரடிப் பங்களிப்பின்றி எமது தேசிய சுதந்திரப் போராட்டம் வெற்றியளிக்கப் போவதில்லை. ஈழத் தமிழ் மக்கள் ஒவ்வொருவரும் விடுதலை வேங்கைகளாக வீரப்புலிகளாக , மாறவேண்டும் தாழ்ந்துபோன தமிழினம் வீரப்புலி இனமாக மாறவேண்டும்.

உண்மையில் எமது மக்களின் பாரிய உயிரிழப்பிற்கும் அவர்களின் உடைமை நாசத்திற்கும், சிங்கள ஆளும் வர்க்கத்தின் இனவெறி பிடித்த, தலைவர்களே பொறுப்பேற்க வேண்டும். உலகில் எல்லா விடுதலைப் போராட்டங்களிலும் ஒடுக்குமுறையின் நெருப்பில் குளிப்பது பொதுசனங்களே. உழைக்கும் மக்களின் உழைப்புச் சக்தியே ஒரு தேசத்தின் ஜீவாதாரசக்தி. எமது எதிரியையும் அவனது நோக்கத்தையும் இனங்கண்டு கொள்வது சுலபம். ஆனால் துரோகிகள் முகமூடி அணிந்து நடமாடுகிறார்கள் எதிரியின் கைப்பொம்மையாகச்செயற்படுகின்றார்கள். தமது சுயநலத்திற்காக சொந்த இனத்தையே காட்டிக்கொடுக்கத் தயங்காத இந்த ஆபத்தான, பிற்போக்கு, சக்திகள் மீது, எமது மக்கள் மிகவும் விழிப்பாக இருக்க வேண்டும்.

எமது தேசத்தின் எதிர்காலச் சிற்பிகளாக ஒரு புதிய இளம் பரம்பரை தோற்றங்கொள்ள வேண்டும். ஆற்றல் மிகுந்தவர்களாக, அறிவுஜீவிகளாக, தேசப்பற்றாளர்களாக, போர்க்கலையில் வல்லுனர்களாக, நேர்மையும் - கண்ணியமும் மிக்கவர்களாக, ஒரு புதிய - புரட்சிகரமான பரம்பரை தோன்ற வேண்டும் இந்தப் பரம்பரையே எமது தேசத்தின் நிர்மாணிகளாக, நிர்வாகிகளாக, ஆட்சியாளர்களாக உருப்பெற வேண்டும்.

தொடரும்...



# பிராந்தியச் செய்திகள்



## 500,000 தொழிலாளர்கள் வேலை இழக்க நேரிடும் – ரணில் எச்சரிக்கை

கொரோனா வைரஸின் தாக்கத்தால் முச்சக்கர வண்டி ஓட்டுநர்கள் முதல் உயர் மட்ட அதிகாரிகள் வரையிலான 500,000 தொழிலாளர்கள் வேலை இழக்க நேரிடும் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்க எச்சரித்துள்ளார்.

மேலும் கடந்த வாரம் அரசாங்கம், பொருளாதார மந்தநிலையின் போது 200 பில்லியன் ரூபாயினை அச்சிட்டு பணவீக்கத்தை அதிகரித்துள்ளது என்றும் குற்றம் சாட்டியுள்ளார்.

குறித்த நெருக்கடிக்கு அரசாங்கத்தினால் வழுங்கப்படும் பதில் போதுமானதாக இல்லை என்று சுட்டிக்காட்டிய அவர், நிலைமை குறித்த பொருளாதார மதிப்பீட்டை வழங்க வேண்டும் என்றார்.

அந்தவகையில் அதிக வேலைகள் மற்றும் வாழ்வாதாரங்கள் இழக்கப்படுவதற்கு முன்னர், நிலைமை குறித்த பொருளாதார மதிப்பீடு, நம்பகமான பொருளாதார தொகுப்பு மற்றும் வேலைவாய்ப்பு, கட்டுமானத் துறைகளுக்கு அவசர நிவாரணம் ஆகியவற்றை அறிவிக்க வேண்டும் என்றும் ரணில் விக்ரமசிங்க கோரிக்கை விடுத்தார்.

இதேவேளை இறக்குமதிகள் மீதான சமீபத்திய தடையை நீக்க வேண்டும் என்றும் சர்வதேச நாணய நிதியத்துடன் இணைந்து செயற்படுவதன் மூலம் ஏற்றுமதி தொடர்பான பிரச்சினைகள் தீர்க்கப்பட வேண்டும் என்றும் ரணில் விக்ரமசிங்க குறிப்பிட்டுள்ளார்.



## நாடளாவிய ரீதியில் ஊரடங்கு அமுல் – மக்களுக்கு முக்கிய அறிவிப்பு

நாடளாவிய ரீதியில் இன்று (ஞாயிற்றுக்கிழமை) ஊரடங்கு சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளது.

இந்த ஊரடங்கு நாளையும் தொடரவுள்ள நிலையில், நாளை மறுதினம் முதல் கொழும்பு, கம்பஹா உள்ளிட்ட நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் ஊரடங்கு தளர்த்தப்படவுள்ளது.

அதன் பின்னர், குறித்த தினத்திலிருந்து மறு அறிவிப்பு வரும் வரையில் அனைத்து மாவட்டங்களிலும் இரவு 10 மணி முதல் அதிகாலை 4 மணி வரை ஊரடங்கு அமுல்படுத்தப்படவுள்ளது.




ஊரடங்கு வேளையில், முன்னர் போன்றே அனைவரும் ஊரடங்கு சட்டத்திற்கு அமைய செயற்பட வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

குழுக்களாக வெளியில் செல்லுதல், குழுக்களாக இணைந்து செயற்படுதல், மதுபானம் உள்ளிட்ட போதைப்பொருட்களை பகிர்தல் மற்றும் விற்பனை செய்தல் முதலான செயற்பாடுகள் ஊரடங்கு காலப்பகுதியில் தடை செய்யப்பட்டுள்ளன.

மேலும் நாடளாவிய ரீதியில் ஊரடங்கு அமுல்படுத்தப்பட்டதையடுத்து, இன்றும் நாளையும் நாடு முழுவதும் 900 தற்காலிக பொலிஸ் அரண்கள் அமைக்கப்பட்டுள்ளதாக பிரதி பொலிஸ் மா அதிபரி அஜித் ரோஹன தெரிவித்தார்.

அத்தோடு, குறித்த காலப்பகுதியில் புலனாய்வு அதிகாரிகளும் சேவையில் ஈடுபடவுள்ளனர். அத்தோடு பொலிஸாரினால் விசேட சுற்றிவளைப்புகளும் மேற்கொள்ளப்படவுள்ளதுடன், வாகனங்களும் சோதனையிடப்படவுள்ளன என அவர் மேலும் குறிப்பிட்டார்.

## நாடளாவிய ரீதியில் வீட்டிலிருந்தே நோன்பு பெருநாளை கொண்டாடும் மக்கள்





நாடு முழுவதும் பொலிஸ் ஊரடங்கு சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ள நிலையில், தமது வீடுகளுக்குள்ளேயே – சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி தொழுகையில் ஈடுபட்டு அமைதியான முறையில் இம்முறை நோன்பு பெருநாளை முஸ்லிம் மக்கள் கொண்டாடி வருகின்றனர். அத்துடன், கொரோனா வைரஸ் அச்சுறுத்தல் முழுமையாக நீங்கி, பாதிக்கப்பட்டவர்கள் குணமடைந்து, நாடு மீண்டும் வழமைக்கு திரும்ப வேண்டும் எனவும் அவர்கள் இறைவனிடம் கேட்டுக்கொண்டனர்.

'ஈதுல் பித்ர்' எனப்படும் ஈகைத் திருநாளானது சமாதானத்தையும், சகோதரத்துவத்தையும் இவ்வுலகில் பரப்பும் நோக்கில் இஸ்லாமியர்கள் கொண்டாடும் ஒரு உன்னத பெருநாள் விழா ஆகும். ரமலான் பெருநாள் வரும் மாதமே இஸ்லாத்தில் சிறந்த மாதமாகக் கருதப்படுகின்றது. முப்பது நாட்கள் உண்ணாமல், பருகாமல், நோன்பிருந்து இறைவனை விழித்திருந்து, தனித்திருந்து, இறைமறையை தினம் ஓதி, இல்லாதவருக்கு ஈந்து இறைவழிபாட்டில் முழுமையாக தன்னை ஈடுபடுத்தி அதன் இறுதியாக இன்பமுடன் பெருநாளை கொண்டாடுகின்றனர்.

அந்தவகையில்வழமையாகபள்ளிவாசல்களில்காலைவேளையில்விசேடதொழுகைகள் நடைபெறும். ஆனால், கொரோனா வைரஸ் பரவலைக்கட்டுப்படுத்துவதற்காக ஊடரங்கு சட்டம் இம்முறை பிறப்பிக்கப்பட்டுள்ளது. மக்கள் கூடுவதற்கும் தடைவிதிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், சமூக இடைவெளியை பின்பற்றியே நிகழ்வுகள் நடத்துவதற்கு கட்டுப்பாட்டுகளுடன் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேலும் பள்ளிவாசல்களும் மூடப்பட்டுள்ளன. இந்நிலையில, மக்கள் வீட்டுக்குள் இருந்து சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி தொழுகையில் ஈடுபட்டு பெருநாளை அமைதியாகக் கொண்டாடினர்.

அதற்கமைய மலையகம், அம்பாறை போன்ற பல்வேறு பகுதிகளிலும் நோன்பு பெருநாளை மக்கள் அமைதியாக கொண்டாடி வருகின்றனர். மலையகத்தில் ஹட்டன், பொகவந்தலாவ போன்ற பகுதிகளில் வீடுகளுக்கு உள்ளேயே மக்கள் அமைதியான முறையில் நோன்பு பெருநாளை கொண்டாடி வருகின்றனர்.

அம்பாறை மாவட்டத்தைப் பொருத்தவரையில், கல்முனை, சாய்ந்தமருது, மருதமுனை மற்றும் நற்பிட்டிமுனை உள்ளிட்ட பல இடங்களில் உள்ள பள்ளிவாசல்களில் பெருநாளிற்கான தக்பீர் சொல்லப்பட்ட நிலையில், தத்தமது வீடுகளில் இருந்து அனைத்து முஸ்லிம் மக்களும் பண்டிகை தொழுகையினை முன்னெடுத்திருந்தனர். அத்தோடு அகில இலங்கை ஜம் இய்யதுல் உலமாவின் வழிகாட்டலுக்கு அமைவாக மிகவும் அமைதியான முறையில் பெருநாள் கொண்டாடப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.






ராஷ்மிகா கன்னட சினிமாவில் ஹீரோயினாக அறிமுகமானவர். இதை தொடர்ந்து தெலுங்கு சினிமா பக்கம் சென்றார்.

அங்கு இவர் நடித்த கீதா கோவிந்தம், டியர் காம்ப்ரேட் ஆகிய படங்கள் பெரிய வரவேற்பு பெற்றது.

இவர் தீவிர விஜய் ரசிகர் என்பதை பல இடங்களில் கூறியுள்ளார்.

இந்நிலையில் இவர் முதன் முதலாக பார்த்த தமிழ் படம் கூட, விஜய்யின் கில்லி தானாம்.



தமிழ் சினிமாவில் ஒரு சில படம் மட்டுமே காலம் கடந்து கொண்டாடப்படும். அந்த வகையில் கௌதம் மேனன் இயக்கிய விண்ணைத்தாண்டி வருவாயா படம் மிகப்பிரபலம்.

அப்படத்தை ரசிகர்கள் தலையில் வைத்து கொண்டாடுவார்கள். இந்நிலையில் தற்போது அப்படத்தின் இரண்டாம் பாகத்தின் ஒரு காட்சியை கௌதம் குறும்படம் போல் வெளியிட்டார்.

அதில் தன் கணவர் உன்னிடம் பேச அனுமதி கொடுத்துவிட்டார், நீ என்னுடைய 3வது குழந்தை மாதிரியான வசனங்கள் ரசிகர்கள் கலாய்த்து எடுத்து வருகின்றனர்.

தமிழ் திரையுலகில் ஐயா எனும் படத்தின் மூலம் கதாநாயகியாக அறிமுகமாகி தற்போது லேடி சூப்பர் ஸ்டாராக வளம் வருபவர் நடிகை நயன்தாரா.

இவர் நடித்து கடைசியாக வெளிவந்த படம் சூப்பர் ஸ்டார் ரஜினி நடித்த தர்பார். இந்நிலையில் நடிகை நயன்தாரா நடிப்பில் அடுத்து வெளியாகவுள்ள படங்கள் என்னென்ன என்பதை பற்றி தான் இங்கு பார்க்க போகிறோம்.

1. நெற்றிக்கண்

2. காத்துவாக்குல ரெண்டு காதல்

3. மூக்குத்தி அம்மன்

4. அண்ணாத்த



சிவகார்த்திகேயன் தமிழ் சினிமா கொண்டாடும் நடிகர். இவர் நடிப்பில் தற்போது டாக்டர் படம் உருவாகி வருகிறது.

இதை தொடர்ந்து சிவகார்த்திகேயன் நடிப்பில் அயலான் படமும் வரவுள்ளது. இப்படம் ஏலியன் கதையம்சம் கொண்டது.

இந்நிலையில் சிவகார்த்திகேயன் தற்போது அட்லீயின் உதவி இயக்குனர் ஒருவரிடம் கதை கேட்டு ஓகே சொல்லியுள்ளதாக தகவல் கிடைத்துள்ளது.

இப்படத்தில் சிவகார்த்திகேயன் டபுள் ஆக்ஷனில் படம் முழுக்க முதன் முறையாக நடிக்கவுள்ளாற், பலருக்கும் கைக்கொடுத்த டபுள் ஆக்ஷன் சிவகார்த்திகேயன் அவர்களுக்கும் கைக்கொடுக்குமா பார்ப்போம்.





நடிகர் விஜய் சேதுபதி தற்போது தமிழ் சினிமாவின் முன்னணி நடிகராக திகழ்கிறார். இவரின் திரைப்படங்கள் இப்போதெல்லாம் பெரிய அளவில் வரவேற்பை பெறுகிறது.

மேலும் இந்த வருடத்தில் பெரிய அளவில் எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ள திரைப்படமான மாஸ்டர் திரைப்படத்தில் நடிகர் விஜய்க்கு வில்லனாக நடித்துள்ளார்.

கொரோனா வைரஸ் காரணமாக நாடு முழுவதும் ஊரடங்கு சட்டம் பிறப்பிக்கப்பட்டு, திரையரங்குகள் அனைத்தும் மூடப்பட்டுள்ளது.

இந்நிலையில் இயக்குனர் சீனுராமசாமி இயக்கத்தில் நடிகர்கள் விஜய் சேதுபதி, விஷ்ணு விஷால் உள்ளிட்டோர் நடித்த திரைப்படம் இடம் பொருள் ஏவல், இப்படம் நீண்ட காலமாக திரைக்கு வராமல் இருந்தது. கொரோனா ஊரடங்கு முடிந்தவுடனே இப்படம் திரைக்கு வரும் என படக்குழு தரப்பில் கூறப்படுகிறது.



சம்பளம் என்பது நடிகர்களின் தனிப்பட்ட விஷயம். குறிப்பிட்ட சம்பளத்தை ஏற்பதும் ஏற்காததும் அவரவர் விருப்பத்தை பொறுத்தது. நடிகைகள் சம்பளத்தை குறைக்க வேண்டும் என்று பேசுவது ஏற்புடையது அல்ல. ஒருதலைபட்சமானது. இதே கேள்வியை நடிகரிடம் கேட்பது இல்லை.
நடிகைகள் குறிப்பிட்ட நிலையை அடைய கஷ்டப்பட்டு உழைத்து இருக்கிறார்கள். கதாநாயகனை போலவே கதாநாயகியும் படத்துக்கு தேவை. நடிகைகள் அதிக சம்பளம் ஏன் வாங்க கூடாது? ஹீரோக்கள் மட்டும்தான் அதிக சம்பளம் வாங்க வேண்டுமா? இவ்வாறு தமன்னா கேள்வி எழுப்பி உள்ளார்.

தொகுப்பு :- ஹாசினி






## தரையில் பாய் விரித்து உறங்குவதால் கிடைக்கும் நன்மைகள்

1) பாய் உடல் சூட்டை உள்வாங்கக்கூடியது,

2) கர்ப்பிணி பெண்கள் பாயில் உறங்குவதால் இடுப்பு வலி, முதுகு வலி வரவே வராது,

3) பாயில் உறங்கும் பழக்கமுடைய பெண்களுக்கு பிரசவ நேரத்தில் “சிசேரியன்” தேவைப்படாது,

4) பிறந்த குழந்தையை பாயில் உறங்க வைப்பதால் கழுத்தில் சுழுக்கு பிடிக்காது, குழந்தையின் முதுகெலும்பு சீர்படும் குழந்தை வேகமாக வளர உதவிடும்,

5) கல்வி கற்கும் மாணவ மாணவிகள் பாயில் உறங்கினால் இளம் வயது கூண் முதுகு விழாது,

6) பெரும்பாலான முதியோர்கள் தரையில் பாய் விரித்து உறங்குவதே அதிகம் விரும்புவார்கள் அதன் காரணம் 60 வயதிற்கு மேல் உடலில் இரத்த ஓட்ட பிரச்சினை இருக்கும் பாயில் சமமாக கால் கையை நீட்டி மல்லாக்க படுக்கையில் உடல் எங்கும் இரத்தம் சீராக பாய்ந்து கொழுப்பை குறைக்கிறது,

7) ஒரு பாய் மூன்று ஆண்டுகள் வரை அதன் தன்மையை இழக்காது,

இரும்பு மரக் கட்டிலில் “பிளாஸ்டிக் போம்” மெத்தையில் உறங்குவதை விட வெறும் தரையில் பாய் விரித்து உறங்குவது நம் உடலில் பெரும் மாற்றத்தையே ஏற்படுத்தக் கூடியது.

“பாயின் எண்ணற்ற நன்மைகளை உணர்ந்த நமது பெரியோர்கள் “கல்யாண சீர்வரிசை கொடுக்கையில் பாய் இல்லாத ஒரு சீர்வரிசை கிடையவே கிடையாது,” என்பது குறிப்பிடத்தக்கது.

தோல்வியை மட்டுமே
சந்தித்து
காயம்பட்ட எனது
மனதை
வருடும் அழகான
தென்றல் நீயடி

## அழகை தக்க வைத்துக்கொள்ள எளிமையான டிப்ஸ்!

அழகை விரும்பாதவர்கள் இருக்க முடியாது. அதற்காக அடிக்கடி பியூட்டி பார்லர்களுக்கு செல்வது எல்லாம் காஸ்ட்லியான செலவு. ஆனால், தினசரி வீட்டில் இருந்தபடியே சில எளிய வழிமுறைகள் மூலமாக உங்கள் இயற்கையான அழகைத் தக்க வைத்துக்கொள்ளலாம். இரவு படுக்கைக்குச் செல்லும் முன் ஒரு பத்து, இருபது நிமிடங்கள் இதற்கு ஒதுக்கினாலே போதுமானது.

**கண்கள்:**

முகத்திற்கு பொலிவும், வசீகரமும் சேர்ப்பவை கண்கள். சிலருக்கு அந்த கண்களின் புருவத்தில் தேவையான அளவிற்கு முடி இருக்காது. இதற்கு சுத்தமான விளக்கெண்ணெயை கொஞ்சமாக எடுத்து புருவ முடிகளிலும், கண்முடிகளிலும் தேய்த்து வந்தால், முடி அடர்த்தியாக வளரும். சோர்வான கண்களுக்கு, ரோஸ் வாட்டரில் நனைத்த காட்டன் பேட், வட்டமாக வெட்டிய வெள்ளரித் துண்டு போன்றவற்றை கண்களின் மேல் வைத்துக்கொள்ளலாம். நன்றாகப் பொடியாக நறுக்கிய வெள்ளரித் துண்டுகளையோ அல்லது அதனுடன் கேரட் ஜூஸைக் கலந்தோ கண்களுக்கு அடியில் தடவி வந்தால், கரு வளையங்கள் மறையும்.

**உதடுகள்:**

தினமும் சிறிதளவு ‘வேசலின்’ எடுத்து உங்கள் உதடுகளில் தடவி வந்தால், மென்மையாகவும், வெடிப்புகள் இல்லாமலும் இருக்கும்.

**பாதம்:**

நாள்தோறும் வேலை முடிஞ்சு வீட்டுக்கு சோர்வா வருவீங்க இல்லையா? வந்ததும் ஒரு பெரிய பாத்திரத்தில் நல்ல நறுமணமுள்ள குளியல் உப்பை வெதுவெதுப்பான தண்ணீரில் கலந்து, உங்கள் பாதங்களை அதில் ஒரு 10 நிமிடம் ஊற வைக்க வேண்டும். சும்மா இருப்பது போரடித்தால், நல்ல ஸ்க்ரப்பர் கொண்டு குதிகாலைத் தேய்க்கலாம். ஆரஞ்சு ஸ்டிக் கொண்டு கால் நகங்களில் படிந்துள்ள அழுக்குகளை அகற்றலாம். பின்னர், கால்களை தண்ணீர் அல்லது சோப்பால் நன்கு கழுவிவிட்டு, ‘கோல்ட் க்ரீம்’ அல்லது ‘மாய்சரைசர்’ போட வேண்டும். இதனால் உங்கள் பாதங்கள் மிருதுவாகவும் பளிச்சென்றும் இருக்கும்.

**முகம்:**

இரவு உறங்கச் செல்லும்முன் நாள் முழுதும் முகத்தில் படிந்துள்ள அழுக்கை அகற்றுவது முக்கியமான வேலையாக இருக்க வேண்டும். எண்ணெய் பசையுள்ள சருமத்தை ‘வால்நட் ஸ்க்ரப்’ கொண்டும், உலர்ந்த மற்றும் சென்ஸிடிவ் சருமத்தை மிருதுவான ‘பேபி ஆயில்’ கொண்டும் துடைக்கலாம். அவ்வாறு துடைக்கும்போது உங்கள் கைகளின் அசைவு வட்ட வாக்கில் இருக்க வேண்டும். பின்னர் குளிர்ந்த நீரில் முகத்தைக் கழுவிவிட்டு தரமான ‘நைட் க்ரீம்’களை உபயோகப்படுத்த வேண்டும். எளிதான மாய்சரைசரும் உபயோகப்படுத்தலாம். இது, உங்கள் சருமத்தை மென்மையாக வைத்திருக்க உதவுகிறது. இந்த மாய்சரைசரை முகம், கைகள், கழுத்து மற்றும் கண்களுக்கு கீழேயும் உபயோகிக்கலாம்.

**தலைமுடி:**

இரவில் எண்ணைய் தேய்த்துவிட்டுக் காலையில் ஷாம்பு தேய்த்துக் குளித்தால் முடிக்கு கூடுதல் ஊட்டச்சத்து கிடைக்கும். ஒரு பாத்திரத்தில் தண்ணீரைக் கொதிக்க வைத்து அந்தப் பாத்திரத்தின் உள்ளே ஒரு சிறிய அளவிலான பாத்திரத்தில் எண்ணெயை (ஆலிவ் ஆயில், ஆல்மண்ட் ஆயில் அல்லது சாதாரண தேங்காய் எண்ணெய்) எடுத்துக் கொண்டு சூடு படுத்த வேண்டும். லேசான சூடு போதுமானது. அவ்வாறு சூடான ஆயிலை உங்கள் விரல்கள் கொண்டு தலையில் மசாஜ் செய்ய வேண்டும். கால்களைப் பராமரிக்க அமரும் அந்த நேரத்தில் இதையும் செய்து முடித்தால் உங்கள் நேரம் மிச்சமாகும்.





## பாகற்காய் பல பிரச்சனைகளை தீர்க்கும் அருமருந்து!

பாகற்காய் இந்த பெயரை சொன்னவுடன் பலருக்கு குமட்டல் வந்துவிடும். சிலர் வாய் முழுக்க அதன் கசப்பு படர்ந்துவிட்டதுபோல உணர்வார்கள். பாகற்காய், அந்த அளவுக்கு வெறுத்து ஒதுக்கவேண்டிய காய் அல்ல. நமக்கு நன்மை தரும் பல அம்சங்கள் இதில் உள்ளன.

புரோக்கோலியில் இருப்பதைவிட இரண்டு மடங்கு பீட்டா கரோட்டின் இதில் உண்டு. இந்த பீட்டா கரோட்டின்தான், நம் உடலுக்குள் ஏதுவாக மாற்றப்பட்டு சேகரமாகும். இது, நமது கண், தோல் போன்றவற்றுக்கு நல்லது. பசலைக்கீரையில் இருப்பதைவிட இரண்டு மடங்கு கல்சியம் இதில் உண்டு. இது, நமது எலும்பு, பல் வளர்ச்சிக்கு உதவும். வாழைப்பழத்தில் உள்ளதைவிட இரண்டு மடங்கு பொட்டாசியம் இருக்கிறது. தசை வலிமை, நரம்பு மண்டல செயல்பாடு, இதய நலன் போன்றவற்றுக்கு பொட்டாசியம் உதவும்.

இரைப்பை பிரச்னைகளுக்கு நல்ல மருந்து. பாகற்காயை ஜூஸாக குடிப்பது குடலில் உருவாகும் புழுக்கள், ஒட்டுண்ணிகளை கொல்ல உதவும். ஒவ்வாமை, வீக்கம், கட்டிகளையும் பாகற்காய் போக்கும். இதன் விதைகள், இதய நோய்களிலிருந்து நம்மை காக்கும். தேவையற்ற கொழுப்புகளை எரித்து, இதய தமனி அடைப்பு ஏற்படுவதில் இருந்து காப்பாற்றும்.

இதன் சாற்றை, எலுமிச்சை சாற்றில் கலந்து காலையில் வெறும் வயிற்றில் ஆறு மாத காலம் குடித்துவர, முகப்பரு பிரச்சனை நீங்கும். தோல் பிரச்சனைகளான சிரங்கு, அரிப்பு, சொரியாஸிஸ், படர்தாமரை, அலர்ஜி போன்றவற்றுக்கு தீர்வு தரும். இதன் சாற்றை தயிரில் கலந்து தலையில் தடவி, சிறிது நேரம் கழித்து கழுவிவிட வேண்டும்.

இதை, தொடர்ந்து செய்தால், முடி பளபளப்பாக மாறும். இதன் சாற்றுடன் சீரகத்தை அரைத்து பூசிவர, பொடுகு பிரச்சனைகள் நீங்கும். இதன் சாற்றுடன் வாழைப்பழத்தை அரைத்து தலையில் தேய்த்தால், தலை அரிப்பு நீங்கும். பாகற்காய் சாற்றோடு கொஞ்சம் சர்க்கரை சேர்த்து பேஸ்ட் மாதிரி செய்து தலையில் பூசி வர, முடிகொட்டுவது குறையும்.

நான் உன் கனவில் வந்து
உன் தூக்கத்தை
கலைக்க நான்
விரும்பவில்லை
விடியும் வரை
காத்திருக்கிறேன்
உன் வரவிற்காய்

தொகுப்பு :- சப்தஹி

# எம்.ஏ சுமந்திரன் ஒரு சுத்துமாத்து பேர்வழி-பனங்கொட்டையான்

நிதர்சனமான பார்வை வரலாறு தனக்கான ஆளுமைகளை காலத்திற்கேற்றாற் போல் உருவாக்கும் இன்றைய அரசியல் சதுரங்கத்தின் தமிழர்களின் சார்பில் ஆளுமையாக அது சுமந்திரனையே முன்னிறுத்துகின்றது.

## ஒரு பேட்டியும் சுமந்திரனுக்கு அறம் போதித்தோரும்!

முள்ளிவாய்க்கால் இறுதிப் போர் உச்சம் பெற்றிருந்த தருணத்தில், தமிழ்த் தொலைக்காட்சியொன்றின் அரசியல் விவாத நிகழ்ச்சியில் கலந்து கொண்டிருந்த ஆயுத இயக்கமொன்றின் தலைவர் ஒருவர் வெளியிட்ட கருத்தோடு இந்தப் பத்தியை ஆரம்பிப்பது பொருத்தமாக இருக்கும். "தம்பி பிரபாகரனின் தமிழீழத்துக்கான அர்ப்பணிப்பு பெரியது. நாங்களும் தமிழீழத்தை இலக்காகக் கொண்டே ஆயுதங்களைத் தூக்கினோம். ஆனால், ஆயுதத்தினால் இலக்கை அடைய முடியாது என்று உணர்ந்த போது, அதனை கைவிட்டோம்" என்று அந்தத் தலைவர் கூறினார். அப்போது, அவரது இயக்கம் இராணுவத்தோடு சேர்ந்து இயங்கிக் கொண்டிருந்தது. முள்ளிவாய்க்கால் இறுதிப் போரின் பின்னர் காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பிலான குற்றச்சாட்டுக்களில் அந்த இயக்கத்தின் பெயரும் உண்டு. அந்த இயக்கம் வவுனியாவில் நிலை கொண்டிருந்த தருணத்தில் அரங்கேற்றிய ஆயுதவழி வன்முறைகளின் நேரடிச் சாட்சிகள் இன்றும் உண்டு.

பின்னரான தருணமொன்றில், அந்த ஆயுத இயக்கம், தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள் கலந்துவிட்டது. அந்த இயக்கத்தின் தலைவர், கடந்த பாராளுமன்றத்தில் உறுப்பினராகக் கூட இருந்தார். எதிர்வரும் தேர்தலிலும் போட்டியிடுகிறார். தமிழ் மக்கள் பேரவையின் முக்கிய தலைவர்களில் ஒருவராகவும் இருக்கிறார். இப்போது, கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன் சிங்கள YouTube தளம் ஒன்றுக்காக வழங்கிய நேர்காணல் தொடர்பில் கவனத்தில் கொள்ளலாம். அந்த நேர்காணல் வெளியாகி சில நாட்களின் பின்னர், தமிழ்த் தொலைக்காட்சியொன்று பேட்டியின் பாகங்களை வெட்டி ஒட்டி திரித்த மொழிமாற்றத்துடன் வெளியிட்டது. குறிப்பாக, "தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆயுதப் போராட்டத்தை தவறு" என்று சுமந்திரன் கூறியிருக்கிறார் என்பதுதான் சர்ச்சைகளின் ஆரம்பம். ஆனால், அந்தப் பேட்டியில் ஆயுதப் போராட்டத்தை தான் ஆதரிக்கவில்லை என்றுதான் சுமந்திரன் குறிப்பிட்டார், எந்தவொரு தருணத்திலும் ஆயுதப் போராட்டத்தை தவறு என்று அவர் கூறியிருக்கவில்லை.

வெட்டி ஒட்டிய பேட்டி தொலைக்காட்சியில் ஒளிபரப்பப்பட்டு சில மணித்தியாலங்களில், ரெலோ அமைப்பின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன், சுமந்திரனுக்கு எதிரான முதலாவது கண்டன அறிக்கை வெளியிட்டார். அத்தோடு ஆரம்பித்த அறிக்கைகளின் போராட்டம் இன்னும் நின்றபாடில்லை. தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா தொடங்கி, புளொட் அமைப்பின் தலைவர் தர்மலிங்கம் சித்தார்த்தன் ஈறாக சி.வி.விக்னேஸ்வரன், சுரேஷ் பிரேமச்சந்திரன், கஜேந்திரகுமார் பொன்னம்பலம், கருணா அம்மான் என்கிற வி.முரளிதரன், சதாசிவம் வியாழேந்திரன் என்று கிட்டத்தட்ட தமிழ் அரசியலில் இருக்கும் பெரும்பான்மையானோர் சுமந்திரனுக்கு எதிராக அறிக்கையை வெளியிட்டும், ஊடக சந்திப்புக்களை நடத்தியும் கருத்து வெளியிட்டுவிட்டார்கள். கடந்த வாரத்தின் நடுப்பகுதியில், சுமந்திரனின் நேர்காணல் தொடர்பிலான சர்ச்சைகளுக்கு கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் வெளியிட்ட அறிக்கை ஓரளவுக்கு முடிவொன்றை எழுதியிருக்கின்றது. அதாவது,



"குழப்பத்தை ஏற்படுத்தும் நோக்கத்துடன் கேட்கப்பட்ட கேள்விகளுக்கு சுமந்திரன் நேர்மையாகவும் வெளிப்படையாகவும் பதிலளித்திருக்கின்றார்.." என்று சம்பந்தன் குறிப்பிட்டிருக்கின்றார். இதற்கு மேலும், கூட்டமைப்பின் பேச்சாளர் பதவியை சுமந்திரனிடம் இருந்து பறிக்க வேண்டும் அவரைக் கட்சியிலிருந்து நீக்க வேண்டும் என்று விடுக்கப்படும் அறிக்கைகள் மற்றும் அரங்காற்றுகைகள் எதுவும் எடுபட வாய்ப்பில்லை.

சுமந்திரனைச் சுற்றி கடந்த வாரங்களில் எழுந்த சர்ச்சை இரண்டு காரணங்களினால் நிகழ்ந்தது. முதலாவது, தேர்தல் - விருப்பு வாக்குச் சண்டை. அடுத்தது, தமிழ்த் தேசியத்தின் காப்பாளர்கள் அல்லது தரநிலை அரசியலினால். ஆயுதப் போராட்டத்தில் நம்பிக்கையில்லை என்கிற கருத்தினை சுமந்திரன் தமிழ்த் தேசிய அரசியலுக்குள் வந்த நாள் முதல் கூறிவருகிறார். அதாவது, தேசியப் பட்டியல் பாராளுமன்ற உறுப்பினராக ஆகிய 2010 முதல் அவர் கூறி வருகின்றார். அதற்காக அவர் விமர்சனங்களையும் எதிர்கொண்டிருக்கின்றார். இப்போது, அறிக்கையை வெளியிட்ட அவரது கட்சிக்காரர்களும், கூட்டமைப்பின் பங்காளிக் கட்சித் தலைவர்கள் உள்ளிட்டவர்கள் ஒரே மேடையில் இருக்கும் போதே, ஆயுதப் போராட்டத்தை தான் ஆதரிக்கவில்லை என்றும், அது எதிர்காலத்திற்கான தெரிவு அல்ல என்றும் சுமந்திரன் கூறியிருக்கின்றார். அப்போதெல்லாம், இந்த அறிக்கைப் போர் வீரர்களுக்கு அந்தக் கருத்துக்கள் பிரச்சினைக்குரியதாக தெரியவில்லை. ஆனால், இன்றைக்கு சுமந்திரனின் கருத்துக்களை பெரும் சர்ச்சையாக்க வேண்டிய தேவை, தேர்தல் - விருப்பு வாக்கினை கருத்தில் கொண்டு எழுந்திருக்கின்றது. ஏனெனில், தோல்வி பயம் என்பது அவர்களை இவ்வாறான அரங்காற்றுகைகளை செய்ய வைக்கின்றது.

கூட்டமைப்பின் ஆரம்பத்திலும் அதன் பெரு வெற்றியிலும் விடுதலைப் புலிகளின் பங்கு கணிசமாக இருந்திருக்கின்றது. கூட்டமைப்பு ஆரம்பிக்கப்படும் தருணத்தில், புளொட் இயக்கத்தை(யும்) உள்வாங்குவது தொடர்பில் பேசப்பட்டது. ஆனால், அந்தப் பேச்சுக்களை முன்னெடுத்தவர்களிடம் புளொட் இயக்கத்தின் தலைவரான சித்தார்த்தன், தன்னுடைய இயக்கம் அரசாங்கத்தோடு சேர்ந்து இயங்குவதானால், புலிகளின் பின்புலத்துடன் தோற்றுவிக்கப்படும் கூட்டமைப்போடு இணைய முடியாது என்று கூறி விலகிக் கொண்டிருந்தார். அவர் புலிகள் அழிக்கப்படும் வரையில் கூட்டமைப்பில் இணைந்திருக்கவில்லை. அதன் பின்னரேயே, கூட்டமைப்புக்குள் வந்தார். பேரவைக்குள்ளும் வந்தார்.

சித்தார்த்தன், ஆயுதங்களினால் இலக்கை அடைய முடியாது என்று கைவிட்டு, ஜனநாயக(!) அரசியலுக்கு திரும்பியவர்களில் ஒருவர். அவரினால் ஆயுதப் போராட்டத்தை இன்று ஆதரிக்க முடியாது. அப்படியான நிலையில், ஆயுதப் போராட்டத்தில் என்றைக்கும் நம்பிக்கை கொண்டிருக்காத ஒருவர், அதனை ஏற்க முடியாது என்று கூறுவது எவ்வாறான சிக்கல் என்று சித்தார்த்தன் வெளிப்படுத்த வேண்டும். ஏனெனில், ஆயுதத்தினால் இலக்கினை அடைய முடியாது என்று கூறும் சித்தார்த்தன், அவரது இயக்கம் ஆயுதங்களை புலிகள் உள்ளிட்ட சகோதர இயக்கங்கள் மீதும், தமிழ் மக்களின் மீதும் திருப்பிய வரலாற்று பதிவுகள் உண்டு. அவற்றையெல்லாம் இலகுவாக் கடந்து நின்று ஆயுதப் போராட்டம் குறித்த வகுப்பினை தமிழ் மக்களுக்கு எடுக்க நினைக்கின்றார்.

தமிழ்த் தேசியப் போராட்டக் களம், அகிம்சைப் போராட்டக் கட்டங்களைக் கடந்தே ஆயுதப் போராட்டங்களுக்குள் நுழைந்தது. நாற்பது வருடங்களாக அதற்குள் நிலை கொண்டது. அதுபோல, முள்ளிவாய்க்கால் முடிவுகளோடு ஆயுதப் போராட்டங்களின் கட்டமும் முடிவுக்கு வந்துவிட்டது. அது தான், உண்மை. ஆயுதப் போராட்டங்களின் கட்டத்தில் இன்றைக்கு யாரும் இல்லை. அப்படியான நிலையில், அடுத்த கட்டங்கள் குறித்த சிந்தனையை நோக்கி நகர்வதுதான் அரசியல் அறம். அந்த அறத்தினை உரையாடுவதும் அவசியமாகின்றது. அகிம்சைப் போராட்டங்களை மக்களைத் தவிர்த்துக் கொண்டு தலைவர்கள் முன்னெடுக்கவில்லை. அங்கும் மக்களின் பங்களிப்புத்தான் அதிகமாக இருந்தது. ஆயுதப் போராட்டத்திலும் அதுதான் நிகழ்ந்தது. மக்களுக்காகத்தான் போராட்டமே. மக்களின் பங்களிப்போடுதான் நிகழ்ந்தாக வேண்டும். இன்றைக்கு அந்த மக்கள் அடுத்த கட்டங்களை நோக்கி சிந்திக்கிறார்கள். ஆயுதப் போராட்டங்கள் தொடர்பிலான வரலாறு மக்களுக்கு தெரியும் கூட்டமைப்பின் வரலாறும் மக்களுக்கு தெரியும் அதனை யாரும் கற்றுத்தர வேண்டியதில்லை.

கூட்டமைப்புக்குள் நிகழ்ந்து கொண்டிருப்பது விருப்பு வாக்குகளுக்கான அரங்காற்றுகை என்பதுவும் மக்களுக்குத் தெரியும். தகுதியற்ற - ஆளுமையற்ற வேட்பாளர்களை முன்னிறுத்திக் கொண்டு கூட்டமைப்பு ஆடிக்கொண்டிருப்பது, ஒரு விதத்தில் அயோக்கியத்தனமான ஆட்டமே. அதில், ஆயுதப்போராட்டத்தைதாங்களே தோள்களில் கொண்டு சுமந்ததாக காட்டிக் கொண்டு ஆடும் ஆட்டத்தை மக்கள் ரசிப்பதற்கான வாய்ப்புக்கள் இல்லை. அப்படியானவர்களை மக்கள் தேர்தல்களில் முறையாக கவனித்துக் கொள்வதற்கான வாய்ப்புக்களே அதிகம்.

தமிழ்த் தேசியத்தின் காப்பாளர்களாக தங்களை வரிந்து கொண்ட தரப்புக்கள் வெளியிடும் தரநிலை அறிக்கைகள் பெரும் குழப்பகரமானவை. தமிழ் மக்கள் பேரவை ஆரம்பிக்கப்பட்ட தருணத்தில், 'தமிழ்த் தேசியத்தில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியும், தமிழ் மக்கள் பேரவையும், சிவில் சமூக அமையமுமே உண்மையான அக்கறையுள்ள அமைப்புக்கள்' என்று கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தரநிலை அறிக்கையொன்றை வெளியிட்டார். இன்றைக்கு பேரவை தொடர்பில் அவர் நிலைப்பாடுகளை மாற்றிக் கொண்டுவிட்டார். சித்தார்த்தனை ஆயுத குழுவின் தலைவராக குறிப்பிட்டு விமர்சிக்கின்றார். பேரவைக்குள் சித்தார்த்தனோடு இருக்கவும், 'எழுக தமிழ்' மேடைகளில் ஏறவும் அவரால் முடிந்திருக்கின்றது என்பது அண்மைக்கால வரலாறுதான்.

தமிழ்த் தேசிய அரசியலில் 'தூய்மைவாதிகள்' என்கிற அடிப்படைகளைக் கொண்டு சுமக்கும் தரப்புக்கள் எப்போதுமே இருந்திருக்கின்றன. ஆனால், உண்மை என்னவென்றால், அரசியலில் தூய்மைவாதத்திற்கு வேலை இருப்பதில்லை. அரசியல் என்பது சந்தர்ப்பங்களை கையாளும் வித்தை இராஜதந்திரம் சார்ந்தது. ஆனால், தூய்மைவாதம் பேசும் தரநிலை வழங்குனர்கள் யார் என்று பார்த்தால், அவர்களுக்கும் கடந்த கால கறுப்பு வரலாறுகள் உண்டு. அதனை மக்கள் கண்டும் வந்திருக்கிறார்கள். அதனை மறைத்துக் கொண்டும் தங்களுக்கு வெள்ளையடித்துக் கொண்டும் புதிய வரலாறுகளை எழுதி தங்களை புனிதர்கள் ஆக்கலாம் என்று யோசிப்பதெல்லாம் அபத்தமே. சுமந்திரன் தன் மீதான விமர்சனங்கள் மற்றும் சர்ச்சைகளின் வழியாக தமிழ்த் தேசிய அரசியலில் மேல் எழுந்து வந்தவர். இந்தச் சர்ச்சைகளின் வழியாகவும் அதனையே அவர் நிகழ்த்தியிருக்கின்றார். இந்தச் சர்ச்சைகளைத் தோற்றுவித்தவர்களுக்கு அது பலனளிக்குமோ இல்லையோ தெரியாது, ஆனால், அது சுமந்திரனுக்கு நிச்சயம் பலனளிக்கும். அதனை எதிர்வரும் காலங்களும் காட்சிகளும் பதிவு செய்யும்.

சுழியோடி

# தம்பி பிரபாகரனின் ஆயுத போராட்டம் அன்றைய தமிழ் தலைமைகளை நடைமுறைப்படுத்த நடத்தப்பட்ட போர் – வட மாகாண முன்னாள் முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன்

## தம்பி பிரபாகரனின் ஆயுத போராட்டம் சரியானது - சி.வி. விக்னேஸ்வரன்



தம்பி பிரபாகரனின் ஆயுத போராட்டம் அன்றைய தமிழ் தலைமைகளை நடைமுறைப்படுத்த நடத்தப்பட்ட போரென வட மாகாண முன்னாள் முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் தெரிவிப்பு.

பிரபாகரனின் ஆயுத போராட்டம் சரியானது என்று நீங்கள் கருதுகின்றீர்களா? என்று முன்னாள் முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் அவர்களிடம் கேள்வி எழுப்பிய போது அவர் தம்பி பிரபாகரனின் ஆயுத போராட்டம் அன்றைய தமிழ் தலைமைகளை நடைமுறைப்படுத்த நடத்தப்பட்ட போரென குறிப்பிட்டார்.

1977 ஆம் ஆண்டு மே மாதம் 11 ஆந் திகதி அன்று ஏற்றுக்கொள்ளப்பட்ட வட்டுக்கோட்டை கடைசி பந்தியை பார்த்தீர்களானால் அதில் கிட்டத்தட்ட பின்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த மகாநாடானது தமிழ் தேசத்தின் ஒரு பொதுவான வேண்டுகோளை முன்வைக்கின்றது. முக்கியமாக தமிழ் இளைஞர்களிடம் தமது சுதந்திரத்திற்காக புனித போரில் தம்மை முற்றாக ஈடுபடுத்துமாறு வேண்டுவதுடன் இறைமை மிக்க தமிழீழம் என்ற இலக்கை அடையும் வரை பின் வாங்காது போரிடுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. அன்றைய கால தமிழ் தலைமைகளின் வேண்டுகோளே புனித போர் என குறிப்பிடப்பட்டுள்ள குறித்த போர் அகிம்சை வழியிலோ, சத்தியாகிரகணம் மூலமோ, அரச தந்திரம் மூலமோ நடைபெற வேண்டும் என்று அடையாளப்படுத்தப்படவில்லை.

ஆகவே தம்பி பிரபாகரன் அவர்கள் குறிப்பிட்ட வட்டுக்கோட்டை தீர்மானத்தின் அடிப்படையில் ஆயுத போராட்டத்தை தேர்ந்தெடுத்ததில் என்ன பிழை? நாம் அகிம்சையில் நாட்டம் கொண்டவர்கள் என்ற முறையில் ஆயுத போராட்டத்தை குறை கூறவோ கொச்சைப்படுத்தவோ எந்த உறுத்தும் இல்லை. தம்ப ி பிரபாகரன் அப்போதைய தமிழ் தலைவர்கள் கோரியதை தான் முழு மூச்சுடனும் நம்பிக்கையுடனும் நடைமுறைப்படுத்தினார். அதை இன்று பிழை என்று கூற எமக்கு எந்த உறுத்தும் இல்லை. மகாபாரதம் நிலத்திற்கான போர் பற்றி கூறுவது. பகவான் கிருஷ்ணனே ஆயுத போராட்டத்தை முன் நின்று நடத்தினார். அன்பு வழியை நாடும் நாங்கள் பகவான் கிருஸ்ணன் சென்ற தூதையும் கவனிக்க வேண்டும். ஊசி குத்தும் இடம் கூட தர முடியாது என்ற பின் தான் போர் தொடங்கியது.

ஆகவே தம்பி பிரபாகரனின் ஆயுத போராட்டம் அன்றைய தமிழ் தலைவர்களின் கோரிக்கையை நடைமுறைப்படுத்த நடத்தப்பட்ட போர் என்பதே எனது கருத்து என்றுதமிழ் தேசிய கூட்டமைப்பின் முன்னாள் முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

தேசியம் சுயநிர்ணய உரிமை தொடர்பாக அவரிடம் கேட்கப்பட்ட கேள்விகளுக்கு பின்வருமாறு பதிலளித்தார்.

**1. கேள்வி - வடகிழக்கு தமிழர் தாயகம் சரியா? தவறா?**

பதில் - வரலாற்றுப்படி வடக்கு கிழக்கு தமிழர் தாயகமே. இன்றும் அங்கு பேசப்படும் பெரும்பான்மை மொழி தமிழே.

**2. கேள்வி - ஆயுத போராட்டம் சரியானதா? தவறானதா?**

பதில் - தம்பி பிரபாகரனின் ஆயுத போராட்டம் ஏன் உருவானது, ஏன் அதனை எவரும் ஒரு பயங்கரவாத போராட்டமாக சித்தரிக்க முடியாது என்று மகாபாரத போரினை உதாரணம் காட்டி சில தினங்களுக்கு முன்னர் தான் தேசிய நாளிதழ் ஒன்றுக்கு பேட்டி அளித்திருந்தேன். எமது இனப்பிரச்சினை பற்றி மேற்கொள்ளப்பட்ட சர்வதேச தரத்திலான விஞ்ஞான ரீதியான முரண்பாட்டு கோட்பாட்டு ஆய்வுகளில் ஆயுத போராட்டம் இன முரண்பாட்டு வட்டத்தின் தவிர்க்க முடியாத ஒரு வடிவம் என்று குறிப்பிடப்படுகிறது. ஆகவே, ஆயுத போராட்டம் எமது இளைஞர்களின் கைகளில் சிங்கள அரசியல்வாதிகளினால் திணிக்கப்பட்ட ஒன்று. ஜயவர்தன உண்மையான ஒரு பௌத்தனாக இருந்திருந்தால் தான் ஆயுதம் ஏந்த வேண்டி இருந்திருக்காது என்று தம்பி பிரபாகரன் கூறியதில் அர்த்தம் இருக்கின்றது.

**3.கேள்வி - விடுதலைப்புலிகள் பயங்கரவாதிகளா? இல்லையா?**

பதில் - பயங்கரவாதிகள் என்பது 2001ம் ஆண்டு செப்டம்பர் 11ஆந் திகதிக்குப் பின் வலுப்பெற்ற ஒரு சொல். பொதுவாகக் கூறுவதானால் அரச பயங்கரவாதமே எமது இளைஞர்களை ஆயுதம் எடுக்கச் செய்தது. முதலில் இலங்கை அரசாங்கம் பயங்கரவாதிகளா? இல்லையா? என்ற கேள்வியைக் கேளுங்கள்.

**4. கேள்வி - இனப்படுகொலை நடந்ததா? இல்லையா?**

பதில் - நடந்தது. நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. நீதிமன்றில் அதனை நிரூபித்தல் சிரமமாக இருக்கக்கூடும். ஆனால் இனப்படுகொலை உண்மையே. தொடர்ந்து வந்த சிங்கள அரசாங்கங்கள் இதைத் தொடர்ந்து செய்து வருகின்றார்கள். நண்பர் சுமந்திரன் போன்றவர்கள் இதனை நீதிமன்றில் நிரூபிக்க முன்வர வேண்டும்.

**5.கேள்வி - விடுதலைப்புலிகளை தமிழ் மக்களுடைய ஏகபிரதிநிதிகளாக ஏற்றுக்கொள்கின்றீர்களா? இல்லையா?**

பதில் - விடுதலைப்புலிகளை ஏக பிரதிநிதிகளாக சம்பந்தப்பட்ட எல்லோரும் ஏற்றுக்கொண்டு தான் நோர்வே தலைமையிலான சமாதான பேச்சுவார்த்தைகள் நடைபெற்றன. இது வரலாறு. அவர்கள் இப்பொழுது இல்லையே. பின் ஏன் இந்தக் கேள்வி?

**6. கேள்வி - இலங்கையின் தேசிய கொடியை ஏற்றுக்கொள்கின்றீர்களா? இல்லையா?**

பதில் - ஒரு நாட்டின் ஒவ்வொரு குடிமகனும் அந்த நாட்டின் தேசியக் கொடியை ஏற்றுக்கொள்ள வேண்டும். ஆனால் அதில் மாற்றங்கள் வேண்டும் என்று கேட்பது எமது ஜனநாயக உரித்து. எமக்கு சமஷ்டி கிடைக்கும் போது மாற்றங்கள் சில ஏற்படும் என்று எதிர்பார்க்கலாம்.

**7. கேள்வி - இராணுவ ஒட்டுக்குழுக்கள் என்று தாங்கள் கருதுவது யாரை?**

பதில் - எந்த ஒரு இராணுவமும் ஒற்றர்களை வைத்திருப்பார்கள். ஒட்டுக் குழுக்கள் என்று போர்க்காலத்தில் குறிப்பிடப்பட்டவர்கள் அரசாங்க படைகளுக்கு ஒற்றர் வேலை செய்தவர்களையே. யார் அவர்கள் என்பது எனக்குத் தெரியாது. நான் போரில் ஈடுபட்டு இருந்த ஒருவர் அல்ல.

8. கேள்வி - எம்.ஏ. சுமந்திரனின் நடவடிக்கைகள் கூட்டமைப்பை ஒன்று இணைக்குமா? பிளவுபடுத்துமா?

பதில் - ஏற்கனவே பிளவுபடுத்திவிட்டதே. அவர் கெட்டிக்காரர். ஆனால் அவர் தம் கெட்டித்தனத்தைச் சுயநல சிந்தனையுடன் பாவிப்பதால்த்தான் அவருக்கு பல எதிர்ப்புக்கள் கிளம்பியுள்ளன. ஒரு வேளை ஆணவம் என்பது அவரோடு கூடப் பிறந்ததோ நான் அறியேன்.

**9. கேள்வி - தமிழீழ கோரிக்கையை ஏற்றுக்கொள்கின்றீர்களா? இல்லையா?**

பதில் - தமிழீழம் என்பது பாரம்பரியமாகத் தமிழர்கள் இலங்கையில் வாழ்ந்து வந்த இடம். சிங்கள ஈழம் என்பது சிங்களம் பேசும் மக்கள் பாரம்பரியமாக வாழ்ந்து வந்த பிரதேசம். தமிழர்கள் தொடர்ந்து 2000 வருடங்களுக்கு மேல் வாழ்ந்த, தொடர்ந்து இன்றும் வாழும் தமிழீழ பிரதேசங்களில் சமஷ்டி அதிகாரம் வழங்க வேண்டும் என்று கேட்டு வருகின்றோம்.

**வடமாகாண முன்னாள் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன்**




## பேஸ்புக் அறிமுகம் செய்யும் புத்தம் புதிய சொப்பிங் சேவை

முன்னணி சமூகவலைத்தளமான பேஸ்புக் ஆனது தனது சேவையின் ஊடாக ஒன்லைன் சொப்பிங் செய்யக்கூடிய வசதியை விரைவில் அறிமுகம் செய்யவுள்ளது.

இந்த தகவலை பேஸ்புக் நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரியான மார்க் ஷீக்கர் பேர்க் தெரிவித்துள்ளார்.

கடந்த வருடமே இதற்கான அடித்தளத்தினை பேஸ்புக் நிறுவனம் போட்டிருந்த நிலையில் தற்போது அனைத்து பயனர்களுக்கும் கிடைக்கக்கூடியதாக மேலதிக வசதிகளை உள்ளடக்கி அறிமுகம் செய்யப்படவுள்ளது.

இவ் வசதியினை பேஸ்புக்கில் மாத்திரமன்றி அந்நிறுவனத்தினால் நிர்வகிக்கப்படும் இன்ஸ்டகிராம், மெசஞ்சர் மற்றும் வட்ஸ் அப் என்பவற்றிலும் பயன்படுத்தக்கூடியதாக இருக்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

எவ்வாறெனினும் உலகில் அதிகளவானவர்கள் பயன்படுத்தும் பேஸ்புக் தளத்தில் இவ் வசதி அறிமுகம் செய்யப்படுவது ஏனைய ஒன்லைன் சொப்பிங் தளங்களுக்கு பாரிய பின்னடைவாக இருக்கும் என்பது குறிப்பிடத்தக்கது.




## மீண்டும் வட்ஸ் அப்பில் கொண்டுவரப்பட்ட மாற்றம்

பேஸ்புக் நிறுவனத்தினால் நிர்வகிக்கப்படடும் பிரபல குறுஞ்செய்தி செயலியாக வட்ஸ் அப் காணப்படுகின்றது.

இச் செயலியில் தரப்பட்டுள்ள ஸ்டேட்டஸ் எனும் வசதியை பயனர்கள் மிகவும் விரும்பி பயன்படுத்துவது வழக்கமாகும்.




முன்னர் இதற்கான நேரம் 30 செக்கன்கள் வரை தரப்பட்டிருந்தது.

எனினும் சில மாதங்களுக்கு முன்னர் இந்த நேரமானது 15 செக்கன்களாக குறைக்கப்பட்டிருந்தது.

இதனால் பயனர்கள் மிகவும் அதிருப்தியடைந்திருந்தனர்.இந்நிலையில் தற்போது மீண்டும் 30 செக்கன்களாக ஸ்டேட்டஸ் நேரம் அதிகரிக்கப்பட்டுள்ளது.

இதனால் பயனர்கள் மகிழ்ச்சியில் உள்ளனர். அன்ரோயிட் சாதனங்களுக்கான 2.20.166 எனும் புதிய வட்ஸ் அப் பதிப்பினை நிறுவுவதன் மூலம் இம் மாற்றத்தினை பயனர்கள் பெற்றுக்கொள்ள முடியும்.

## யூடியூப்பில் கின்னஸ் சாதனை படைத்த 89 வயதான மூதாட்டி

பிரபல வீடியோ பகிரும் தளமான யூடியூப்பினை பயன்படுத்துபவர்களின் எண்ணிக்கை இன்று அதிகமாக காணப்படுகின்றது.எனினும் அதிக அளவில் இளைஞர், யுவதிகளே பல்வேறு வீடியோக்களை பதிவேற்றம் செய்து வருகின்றனர். இப்படியிருக்கையில் ஜப்பானைச் சேர்ந்த 89 வயதான மூதாட்டி ஒருவர் வீடியோ ஹேம் தொடர்பான வீடியோக்களை பதிவேற்றம் செய்து வந்துள்ளதுடன் தற்போது கின்னஸ் சாதனைக்கும் சொந்தக்காரர் ஆகியுள்ளார்.

Gamer Grandma எனும் யூடியூப் சனலின் ஊடாகவே தனது வீடியோக்களை பதிவேற்றம் செய்து வந்துள்ளார். Hamako Mori எனும் பெயரைக் கொண்ட இவருக்கு மிகவும் வயதான ஹேமிங் வீடியோ பதிவேற்றுனர் என்ற தகைமையின் அடிப்படையில் குறித்த கின்னஸ் சாதனை பதிவு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை தற்போதுவரை இவரது யூடியூப் சனலை 270,000 பேர் சப்ஸ்கிரைப் செய்துள்ளனர் என்பது விசேட அம்சமாகும்.




## ரூபாய் நோட்டு, பொருட்களில் கிருமி நீக்கும் கருவி?

ஊரடங்கு தளர்த்தப்பட்டாலும், கொரோனா வைரசின் பிடி இன்னும் தளர்ந்தபாடில்லை. கொரோனாவின் தாக்கம், இரண்டு ஆண்டுகள் வரைகூட நீடிக்கலாம் என தொற்று நோயியலாளர்கள் தெரிவித்துள்ள நிலையில், பலரும் தொடக்கூடிய பொருட்கள் மூலம் கொரொனா பரவுவதை தடுப்பது அவசியமாகி உள்ளது.




இதற்கென ஹைதராபாதிலுள்ள, பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவனத்தின் (டி.ஆர்.டி.ஓ.) ஆராய்ச்சியாளர்கள், இரண்டு வகை புறஊதாக் கதிர் கருவிகளை உருவாக்கியுள்ளனர். இதில் 'துருவ்ஸ்' (DRUVS) என்ற கருவி, மொபைல், லப்டப், டப்லட் போன்ற கருவிகளை சில நொடிகளில் சுத்தம் செய்யும் திறன் கொண்டது.

பெட்டி வடிவில் உள்ள துருவ்ஸ் கருவியின் அருகே கையை கொண்டு சென்றால், அதில் உள்ள உணரிகள், கதவை திறக்கும். சுத்தப்படுத்தவேண்டிய பொருளை உள்ளே வைத்தும், தானே மூடிக்கொள்ளும். வைக்கப்படும் பொருளின், 360 கோணத்திலும் புறஊதா கதிர்களை பாய்ச்சி சுத்தம் செய்த பிறகு, தானே அணைந்துவிடும்.

அதே போல, 'கிளீன் நோட்' என்ற கருவி, ரூபாய் நோட்டுக்கள், காகிதங்கள் போன்றவற்றை தனித்தனியாக தானே எடுத்து புறஊதா கதிர்களை பாய்ச்சி சுத்தம் செய்யும்.செறிவான புறஊதா கதிர்களை, 30 விநாடிகளுக்கு மேல் பாய்ச்சினால், பெரும்பாலான பக்டீரியாக்கள், வைரஸ்களை கொன்றுவிடும் என்பது குறிப்பிடத்தக்கது.



**அடுத்த, 18 மாதங்களுக்குள், தடுப்பூசியை உருவாக்கவேண்டும். அதை, 7 பில்லியன் மக்களுக்கு போடவேண்டும். அப்போது தான் நவீன உலகின் முதலாம் தொற்று நோயான கொரோனா ஒழியும். இது நடக்குமா? நடக்கும் என்றே நான் நம்புகிறேன்.**

பில் கேட்ஸ்,
நிறுவனர்,மைக்ரோசாப்ட்

# விளையாட்டு செய்திகள்



## இன்னொரு உலகக்கிண்ண தொடரை நடத்திவிட்டு புதிய மைதானம் அமைப்பதை பற்றி யோசிக்கலாம்: மஹேல

இலங்கையில் புதிதாக நிர்மாணிக்கப்படவுள்ள சர்வதேச கிரிக்கெட் மைதானம் தொடர்பாக, அணியின் முன்னாள் வீரரான மஹேல ஜயவர்தன, தனது அதிருப்தியை வெளியிட்டுள்ளார்.

கிட்டத்தட்ட 40 மில்லியன் அமெரிக்க டொலர்கள் செலவில், ஹோமாகமவில் சர்வதேச கிரிக்கெட் மைதானமொன்று நிர்மாணிக்கப்படவுள்ளது.

இந்த மைதானம் அமைவதற்கு பல முன்னாள் வீரர்கள் தங்களது அதிருப்தியை வெளியிட்டுள்ளனர். இந்த பட்டியலில் மஹேல ஜயவர்தனவும் இணைந்துள்ளார்.

இதுகுறித்து மஹேல ஜயவர்தன தனது டுவிட்டர் பக்கத்தில்குறிப்பிட்டுள்ளதாவது,'இலங்கையானது இப்போது இருக்கும் வசதிகளைக் கொண்டே ஏற்கனவே இரண்டு உலகக் கிண்ணத் தொடர்களை நடாத்தியுள்ளது.

உலகக் கிண்ண தொடரொன்றினை நடத்தும் வாய்ப்பு ஒன்றை பெற்ற பின்னர் ஐ.சி.சி. இடம் நிதியுதவி பெற்று மைதானங்களை நிர்மாணிப்பது தொடர்பில் யோசிக்க வேண்டும்' என பதிவிட்டுள்ளார்.

## கொரோனா பாதிப்பு பிரச்சனையை ஓரம் கட்டிவிட்டு போட்டி?

கொரோனா பாதிப்பு பிரச்சனையை ஓரம்கட்டி விட்டு தென்ஆப்பிரிக்காவுக்கு எதிரான குறுந்தொடரை நடத்த பிசிசிஐ பரிசீலித்து வருகிறது.

கடந்த ஒரு மாதமாக இந்த பேச்சுவார்த்தைகள் இருநாட்டுவாரியங்களுக்கும் இடையே நடைபெற்று வருகிறது. 3 டி20 போட்டிகள் கொண்ட தொடராக இது இருக்கலாம்.

ஆனால், அரசு அனுமதி அளித்தால் தான் வெளிநாட்டுப் பயணம் கிரிக்கெட் எல்லாம் சாத்தியமாகும்.

இரு நாடுகளுக்குமான சமீபத்திய ஒரு நாள் தொடர் மார்ச்சில் ரத்து செய்யப்பட்டதை ஈடுகட்ட இந்த டி20 தொடர் திட்டமிடப்பட்டுள்ளது. இருவாரியங்களுக்கும் பொது ஒளிபரப்பு நிறுவனம் இருப்பதால் தொடரை நடத்துவதில் சிக்கல் இருக்காது என்றும் பார்க்கப்படுகிறது.

பிசிசிஐ மருத்துவ குழுவுடன் பரிசீலித்து இது குறித்து ஜூன் மாத்தில் முடிவு செய்ய உள்ளது.

இந்த தென் ஆப்பிரிக்கா, இந்தியா தொடர் ரசிகர்கள் இல்லாமல் நடக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## ஃபெடரரின் கோரிக்கைக்கு பிரித்தானியாவின் முன்னணி வீராங்கனையும் ஆதரவு!

ஆண்கள் மற்றும் பெண்கள் டென்னிஸ் சங்கங்கள் இணைய வேண்டுமென்ற ஃபெடரரின் கோரிக்கைக்கு, பிரித்தானியாவின் முன்னணி வீராங்கனை ஜோஹன்னா கொன்டா ஆதரவு அளித்துள்ளார்.

டென்னிஸ் உலகில் அதிக கிராண்ட்ஸ்லாம் பட்டங்களை வென்றுள்ள பெருமைக்குரிய சுவிஸ்லாந்தின் ரோஜர் ஃபெடரர், கடந்த மாதம் ஆண்கள் மற்றும் பெண்கள் டென்னிஸ் சங்கங்கள் இணைய வேண்டுமென வலியுறுத்தியிருந்தார்.

ஃபெடரரின் இந்தக் கோரிக்கைக்கு வீரர்கள், வீராங்கனைகள், ரசிகர்கள் என அனைத்துத் தரப்பினரும் ஆதரவு தெரிவித்து வருகின்றனர்.

இந்த நிலையில் இந்தப் பட்டியலில், உலகின் 14ஆம் நிலை வீராங்கனையான 29 வயதான ஜோஹன்னா கொன்டாவும் இணைந்து ஆதரவு அளித்துள்ளார்.

இதுகுறித்து அவர் கூறுகையில், 'இரு சங்கங்களும் ஒன்றிணைய வேண்டும் என நீண்டகாலமாகப் பேசப்பட்டு வருகிறது. ஆனால் ஃபெடரரைப் போன்ற பிரபல வீரர் ஒருவர் பேசும்போது அதற்குக் கூடுதல் கவனம் கிடைக்கிறது.

நீண்டகால அடிப்படையில் பார்க்கும்போது இது சரியான யோசனை தான். ஆனால் இது நடக்கக்கூடாது எனப் பலர் விரும்புவார்கள். அதேபோல இதற்கு ஆதரவாகவும் பலர் உள்ளார்கள்' என கூறினார்.





## இலங்கை அணியுடனான தொடரை நடத்துவது குறித்து தீர்மானிக்கவில்லை: பங்களாதேஷ்

இலங்கை கிரிக்கெட் அணியுடனான டெஸ்ட் தொடரை எப்போது நடத்துவது என்பது குறித்து இன்னமும் தீர்மானிக்கபடவில்லை என பங்களாதேஷ் கிரிக்கெட் சபையின் தலைவர் நஷ்முல் ஹசன் தெரிவித்துள்ளார்.

இலங்கை மற்றும் பங்களாதேஷ் அணிகள், எதிர்வரும்ஜூலைமாதம்ஐ.சி.சிடெஸ்ட் சம்பியன்ஷிப் தொடரின் ஒரு அங்கமாக மூன்று போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடுவதாக இருந்தது.

ஆனால், கொரோனா வைரஸ் தொற்று அச்சுறுத்தல் காரணமாக இத்தொடர் நடைபெறுமா என்ற அச்சம் எழுந்துள்ளது.

இதுகுறித்து பங்களாதேஷ் கிரிக்கெட் சபையின் தலைவர் நஷ்முல் ஹசன் கூறுகையில், 'இன்று பாதுகாப்பாக இருக்கும் இடம் நாளை பாதுகாப்பாக இருக்குமா? என்பது பற்றித் தெரியாது. ஏனெனில், வைரஸ் தாக்கம் மீண்டும் வருகின்றது. எனவே, யாரும் இது எப்போது முடியும் என்பதையோ அல்லது எப்படியான சூழ்நிலை உருவாகும் என்பதையோ கணிக்க முடியாது.

இலங்கை கிரிக்கெட் அணி தொடரை சொந்த நாட்டில் நடத்துவதாக குறிப்பிட்டிருந்தனர். ஆனால், இதனை இப்போது அவர்களது விருப்பத்தை வைத்து மாத்திரம் தீர்மானிக்க முடியாது. நாங்கள் முக்கியமான தீர்மானங்களை எடுக்க வேண்டியிருக்கின்றது. அதில், வீரர்கள் எப்படிப் பயணிப்பார்கள், அவர்கள் எங்கே தங்க வைக்கப்படவுள்ளனர், எங்களுக்கு அவர்களை அனுப்ப அனுமதி கிடைக்குமா? அல்லது இல்லையா? என பல கேள்விகளுக்கு பதில் கிடைக்க வேண்டியிருக்கின்றது.

நாங்கள் ஜூலையிலா அல்லது ஓகஸ்டிலா? என கிரிக்கெட் போட்டிகளை மீண்டும் விளையாட ஆரம்பிக்கும் திகதியினை என்னால் வழங்க முடியாது. நாங்கள் ஐ.சி.சி என்ன செய்கின்றது, ஆசிய கிரிக்கெட் சபை என்ன செய்கின்றது? மற்ற நாடுகள் என்ன செய்கின்றது என்பதைப் பார்க்க வேண்டும். இதுவரையில் எந்த நாடும் கிரிக்கெட் போட்டிகளை மீள விளையாடும் திகதிகள் குறித்து அறிவிக்கவில்லை. நாங்கள் விளையாடுவதற்கான திகதிகளை முதலில் அறிவிக்க வேண்டும் எனக் கூறப்படுவது தவறான யோசனையாகும்' என கூறினார்.

# உலக செய்திகள்

## பாகிஸ்தானில் பயணிகள் விமான விபத்தில் 92 பேர் உயிரிழப்பு

பாகிஸ்தானில் பயணிகள் விமானம் விபத்துக்குள்ளானதில் குறைந்தது 92 பேர் உயிரிழந்துள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். ‘எயார்பஸ் ஏ-320 பயணிகள் விமானம்’ அன்று (வெள்ளிக்கிழமை) தெற்கு பாகிஸ்தான் நகரமான கராச்சியில் உள்ள சர்வதேச விமான நிலையத்தை ஒட்டியுள்ள கராச்சியின் அடர்த்தியான மாடல் காலணி பகுதியில் உள்ள குடியிருப்புகளில் மோதி விபத்துக்குள்ளானது.

கிழக்கு நகரமான லாகூரிலிருந்து கராச்சிக்கு பயணித்த பாகிஸ்தான் சர்வதேச எயார்லைன்ஸ் விமானமான பி.கே-8303 விமானத்தில் குறைந்தது 91 பயணிகள் இருந்ததாக அதிகாரப்பூர்வ பயணிகள் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.இதில், அதிஷ்டவசமாக குறைந்தது இரண்டு ஆண் பயணிகள் தப்பியதாகவும், இவர்கள் கராச்சியில் உள்ள மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று வருவதாகவும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். அத்துடன் கராச்சியின் அடர்த்தியான மாடல் காலணி பகுதியில், விமானம் வீடுகளில் மோதியதில் தரையில் இருந்த பலர் காயமடைந்ததாகவும், அவர்கள் தற்போது சிகிச்சை பெற்று வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதுவரை 19 சடலங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும், இதில் ஜின்னா முதுகலை மருத்துவ மையத்தில் 60 சடலங்கள் வைக்கப்பட்டுள்ளதாகவும், கராச்சியின் மிகப்பெரிய அரசு மருத்துவமனை மற்றும் சிவில் மருத்துவமனை கராச்சியில் 32 சடலங்கள் வைக்கப்பட்டுள்ளதாகவும், சுகாதார அமைச்சின் செய்தித் தொடர்பாளர் யூசுப் கூறினார்.



## நடப்பு ஆண்டு பொருளாதார வளர்ச்சி இலக்கை நிர்ணயிக்கப்போவதில்லை : சீனா அறிவிப்பு

உலகையே அச்சுறுத்திவரும் கொரோனா வைரஸ் (கொவிட்-19) தொற்றால், கடுமையாக பாதிக்கப்பட்டுள்ள சீனா, இனி இந்த ஆண்டு பொருளாதார வளர்ச்சி இலக்கை வைக்கப் போவதில்லை என அறிவித்துள்ளது. சீன பிரதமர் லி கெக்கியங், வருடாந்திர நாடாளுமன்ற கூட்டத்தில் உரையாற்றிய போதே அவர் இந்த அறிவிப்பினை வெளியிட்டார். இதன்போது அவர் மேலும் கூறுகையில், ‘கொவிட்-19 வைரஸ் பெருந்தொற்று உலக பொருளாதாரத்திலும் மற்றும் வர்த்தகங்கள் மீதும் செலுத்தியுள்ள தாக்கத்தால் சீனாவின் வளர்ச்சியை கணிப்பது என்பது கடினமாகியுள்ளது.

சீனாவில் அதிகரித்துவரும் வேலையில்லா திண்டாட்டம் சமூக ஸ்திரத்தன்மைக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தும் என்ற அச்சம் அதிகரித்து வருவதால் பொருளாதாரத்தை ஊக்குவிக்கும் வகையில் பல்வேறு பொருளாதார நடவடிக்கைகள் எடுக்கப்படும்’ என கூறினார். கொரோனா வைரஸ் பெருந்தொற்றால் அமெரிக்காவுக்கும், சீனாவுக்கும் இடையேயான மோதல் போக்கு நீடிக்கின்ற நிலையில், சீன பிரதமரின் இந்த அறிவிப்பு வெளிவந்துள்ளது.

1990ஆம் ஆண்டிலிருந்து சீனா அதன் ஜிடிபி என கூறப்படும் உள்நாட்டு மொத்த உற்பத்தியை பதிவு செய்து வருகிறது. கொரோனா வைரஸ் அச்சம் காரணமாக சீனாவில் அமுல்படுத்தப்பட்ட ஊரடங்கால் உலகிலேயே இரண்டாவது மிகப்பெரிய பொருளாதாரத்தை கொண்ட நாடான சீனாவில், ஆண்டின் முதலாவது காலாண்டில் நாட்டின் ஜிடிபி 6.8 சதவீதம் வீழ்ந்தது.



## தன்னை தானே தனிமைப்படுத்திக் கொண்டார் மலேசிய பிரதமர்!



கொரோனா வைரஸ் (கொவிட்-19) அச்சுறுத்தல் காரணமாக, மலேசிய பிரதமர் முஹைறதீன் யாசின் தன்னை தானே தனிமைப்படுத்திக் கொண்டுள்ளார். பிரதமரின் அலுவலக சந்திப்பில் கலந்துகொண்ட அதிகாரி ஒருவருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்ட நிலையில், அவரும் தற்போது 14 நாட்களுக்கு தனித்திருக்க உள்ளார்.

கொரோனா நோய்த் தொற்றுக்கான பரிசோதனையில் பிரதமருக்கு வைரஸ் தொற்று இல்லை என்பது உறுதியாகி இருக்கிறது. இருந்தபோதிலும், பாதுகாப்பு கருதி அவர் இந்த முடிவினை எடுத்துள்ளார். அத்துடன், அக்கூட்டத்தில் கலந்துகொண்ட மற்ற உறுப்பினர்களும் அவரவர் வீடுகளில் 14 நாட்களுக்கு தனித்திருக்க உள்ளனர்.

இதனைத் தொடர்ந்து பிரதமர் அலுவலகத்தில் நடத்தப்படும் அனைத்துக் கூட்டங்களும் சமூக இடைவெளி கடைப்பிடிக்கப்படுகிறது. முறையான சோதனை மேற்கொள்ளப்பட்ட உறுப்பினர்கள் அனுமதிக்கப்படுகின்றனர் என்று மலேசியப் பிரதமர் அலுவலகம் தெரிவித்துள்ளது. கொரோனா வைரஸ் (கொவிட்-19) தொற்று பரவுவதை எதிர்த்து, நாடு தழுவிய ரீதியில் நடைமுறையில் உள்ள எளிதாக்கப்பட்ட முடக்கநிலை, எதிர்வரும் ஜூன் மாதம் 9ஆம் திகதி வரை நீடிக்கின்றது.

## உலகளாவிய ரீதியில் 53 இலட்சத்தைக் கடந்த கொரோனா தொற்றாளர்களின் எண்ணிக்கை

உலகளாவிய ரீதியில் கொரோனா தொற்றாளர்களின் எண்ணிக்கை 53 இலட்சத்தைக் கடந்துள்ளது. அதற்கமைய கொரோனா வைரஸினால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 53 இலட்சத்து 4,001 ஆக பதிவாகியுள்ளது. மேலும் இந்த தொற்று காரணமாக இதுவரையில் 340,004 பேர் உயிரிழந்துள்ளனர். அதேவேளை, கொரோனா தொற்றுறுதியான 21 இலட்சத்து 58 ஆயிரத்து 567 பேர் குணமடைந்துள்ளனர். பிரிட்டனில் கடந்த 24 மணித்தியாலத்தில் 351 இறப்புகள் பதிவாகி உள்ளதாக, கொரோனா வைரஸ் தொற்று அனர்த்தம் குறித்து, புள்ளிவிபரங்களை வெளியிட்டுவரும் உலக இணையம் தெரிவித்துள்ளது.



இந்த நிலையில் பிரிட்டனின் மொத்த மரணங்கள், 36,393 ஆக உயர்ந்துள்ளன. அத்துடன் புதிய தொற்றாளர்கள் 3,287 பேருடன் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 254,195 ஆக உயர்ந்துள்ளது. இதனையடுத்து, பிரிட்டனுக்குள் பிரவேசிக்கும் அனைவரையும் 14 நாட்களுக்கு கட்டாயமாக சுயதனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்படுவார்கள் என அந்த நாட்டு அரசாங்கம் அறிவித்துள்ளது. பிரித்தானியாவுக்குள் பிரவேசிப்பவர்கள் தாம் சுயதனிமைப்படுத்தலில் உள்ள இடத்தை அறிவிக்க வேண்டும் எனவும் வலியுறுத்தப்பட்டுள்ளனர்.

இதேவேளை, அமெரிக்காவின் மொத்த இறப்புகள் 97 ஆயிரத்தைக் கடந்து 97,647 ஆக உயர்ந்துள்ளன. தொற்றாளர்களின் எண்ணிக்கை 1,645,094 ஆக உயர்ந்துள்ளது. இதனடிப்படையில் உலகளாவிய ரீதியில் கொரோனா தொற்றாளர்களின் எண்ணிக்கை 53 இலட்சத்து 4,001 ஆக பதிவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மக்கள் பார்வையில் அரசியல் கட்சியினதும்,தலைவர்களதும் சுயரூபங்கள் அன்றிலிருந்து இன்றுவரை!

## தமிழ் தேசிய கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்மந்தன் :



கூட்டமைப்பின் தலைவர் ஒரு அகிம்சைவாதி. தை பிறந்தால் வழி பிறக்கும் என்று அடிக்கடி கூறுபவர். அரசாங்கத்தின் நிகழ்ச்சி நிரல்களை நன்கு அறிந்தவர். வாழைப்பழத்தில் ஊசி ஏற்றுவது போன்று மட்டுமே இவர் காலகாலமாக அரசியல் செய்து வருகின்றார். தான் சொல்வதையே கட்சி செய்ய வேண்டும் அதனை மீறி செயற்படுபவர்களை கட்சியிலிருந்து ஓரங்கட்டும் நடவடிக்கைகளையே இவர் மேற்கொண்டுள்ளார். கட்சிகளில் சர்ச்சை வருகின்ற பொழுது சொந்த கருத்து என கூறி சமாளிப்பதில் திறமையானவர். அரசியலில் பழம் தின்று கொட்டை போட்ட மூத்த அரசியல்வாதி. தமிழரசு கட்சியை வலுப்பெற செய்வதில் முன்இணைப்போடு செயற்படுபவர். கூட்டமைப்பு பலம் பெற வேண்டுமா? இல்லை என்பது பற்றி அல்ல அவரது கவலை. கூட்டமைப்பு விடுதலைப்புலிகளால் உருவாக்கப்பட்டது என்ற கருத்தை ஏற்றுக்கொள்கிறார். ஆனாலும் அதனுடைய கொள்கைகளுக்கு சற்று முரணானவர்.

## தமிழரசு கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா :



இவர் ஒரு ஆரம்பகால அரசியல்வாதி. போர்க்குணம் கொண்ட கூர்வால். வரலாற்றை ஆரம்பித்துவிட்டால் போதும் அடுக்கிக்கொண்டே போவார். தேசிய பற்றுள்ளவர். தற்போது இருக்க்கூடிய அரசியல் தலைமைகளுள் போராட்டம் பற்றி கருத்து தெரிவிப்பதற்கு தகுதியுடையவர். இவருடைய அரசியல் சானக்கியம் வேறுபட்டது. ஏனைய கட்சிகளையும் அரசியல்வாதிகளையும் அணைத்துச்செல்வதிலும் அணுகு முறைகளை ஏற்படுத்துவதிலும் சிறந்தவர். பேசிப் பேசியே காலத்தை கொண்டு சென்றவர் என்றும் கூறலாம்.

## புளொட் கட்சியின் தலைவர் சித்தார்த்தன் :



திப்பு முதல் டோக்கியோ வரையிலான அரசியல் பேச்சுக்கள் இவருக்கு தெரியும். அரசியலில் மூத்த அரசில்வாதி. ஈழுப்போரின் இறுதிக்கட்டத்தில் விடுதலைப்புலிகளுடனான போரை நிறுத்தினால் புலிகளுக்கு ஒட்சிசன் கிடைத்துவிடுமாப் போல் ஆகிவிடும் என்று கூறியவர் 2009 முதல் அரசாங்கத்துடன் இணைந்து செயற்பட்டவர். கொலை கொள்ளை, கற்பழிப்பு போன்ற குற்றச்சாட்டுக்கள் இவர் மீது சுமந்தப்பட்டதொன்று. ஊடகவியலாளர் சிவராம் இவருக்கு தொடர்பு இருக்கிறது. போராட்டத்தின் வலி தெரிந்தவர். அரசியலில் இவருடைய தகப்பனாரல் தர்மலிங்கம் சித்தார்த்தனுக்கு நன்மதிப்புண்டு. அரசியல் பேசி பேசியே மாற்றுக்கருத்துக்களை கூறி கூறியே சந்தர்ப்பவாத அரசியலை மேற்கொண்டே இவர்களின் அரசில் தொடர்ந்து செல்கிறது.

## ரெலோ கட்சியின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன் :



அரசியலில் மகா நடிகன். மீனுக்கு தலையையும், பாம்புக்கு வாலையும் காட்டுவதில் சிறந்தவர். அரசியல் கைதிகளுக்காக சாகும் வரை உண்ணாவிரதம் இருப்பதற்காக பல முறை துடித்தவர். இடம் பொருள் ஏவல் தெரிந்து செயற்படுபவர். தொழில் ரீதியாக இவர் பெரிய கில்லாடி போராட்டத்தின் வலி தெரியும் ஆனால் அரச படைகளோடு சிறிது காலம் சேர்ந்து செயற்பட்டவர். இவர் மீதும் கொலை கொள்ளை கற்பழிப்பு போன்ற குற்றச்சாட்டுக்கள் மக்களால் கூறப்பட்டது.

## ஈபி.ஆர்.எல்.எப் கட்சியின் தலைவர் சுரேஸ் பிரேமச்சந்திரன் :



பிரத்தியேகமாக இவருக்கு மண்டையன் குழு என்ற பெயர் இருக்கிறது. ஆனால் மண்டையன் குழு தான் இல்லையென்றும் அதற்கு விளக்கம் அளித்துள்ளார். இராணுவதுடன் சேர்ந்து அசோக்கா கொட்டலில் பல கொலைகளை செய்தவர் என கூறப்படகிறது. தமிழ் தேசிய கூட்டமைப்பின் பேச்சாளராக இருந்த பொழுது சிறந்து விளங்கினார். த. தே .கூட்டமைப்பை தவறான பாதையில் பயணிக்கிறது என்பதை சுட்டிக்காட்ட முயன்ற போது அவர் அக்கட்சியில் இருந்து தூக்கி வீசப்பட்டார். த .தே கூட்டமைப்பை உடைப்பதற்கு பல்வேறு சதித்திட்டங்களின் பின்னணியில் இவரும் செயற்பட்டவர் என்று கூறப்படுகிறது. ஆனாலும் மாற்றுத் தலைமை ஒன்றை உருவாக்க வேண்டும் என்று பெரிதும் உழைத்தவர். சிறந்த அரசியல்வாதி. கொலை, கொள்ளை, கற்பழிப்பு போன்ற குற்றச்சாட்டுக்களுக்கு உள்ளானவர்.

## தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் ஆனந்த சங்கரி :



இவர் தமிழினத்தின் துரோகி என்று பலராலும் பார்க்கப்படுபவர். விடுதலைப்புலிகளை ஏகபிரதி நிதிகளாக ஏற்றுக்கொள்ளாத தலைவர். தனது சொந்தக் கருத்தை ஒளிவு மறைவு இன்றி பேசுவார். அதனாலேயே தமிழ் தேசிய கூட்டமைப்பின் தலைவர் பதவியை இழந்தவர். தொடர்ந்தும் இவரால் அரசியலில் பிரகாசிக்க முடியவில்லை. இவர் அரசியலில் பல விருதுகளை பெற்றுள்ளார். இவர் அரசியலில் சகிப்புத் தன்மைக்கான விருதை பெற்றுள்ளார். இவர் ஒரு அறிவுக்களஞ்சியம். மாவை சேனாதி ராஜாவை கண்ணில் காட்டாது.

## தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் :



தேசியம் சுயநிர்ணய உரிமை என்பது இவரது கட்சியின் இலக்கு. இவரின் கட்சியல் உள்ளவர்கள் இவரை பிரபாகரனுக்கு பின் அடுத்த தலைவர் என்று கூறுவார்கள். பூகோள அரசியல் பற்றி பேசி பேசியே இவரது அரசியல் நகர்ந்து செல்கிறது. தமிழ் தேசிய கூட்டமைப்பில் இருந்து விலகி சென்ற பின் இவர்களால் பெரிதும் பிரகாசிக்க முடியவில்லை. ஒரு தேசம் இரு நாடு என்பது இவர்களது கொள்கை. த. தே. கூட்டமைப்பை பிளவு படுத்துவதில் இவருக்கு முக்கிய பங்குண்டு. தமது வாசிக்காக அரசியலில் எந்த விட்டுக்கொடுப்புக்களை செய்யவும் இவர்கள் தயங்குவதில்லை.

## ஈரோஸ் கட்சியின் தலைவர் பிரபாகரன் :



கொள்ளை இல்லாதவர். பணம் எங்கேயோ அங்கேயே இவரும் நிற்பார். கட்சியை வைத்து பணம் சம்பாதிப்பவர். மற்ற ஆயுத கட்சிகளை போல் எவரையும் காட்டிக்கொடுக்கவில்லை. ஆனாலும் அரசியலில் இவரால் பிரகாசிக்க முடியவில்லை. தற்பொழுது மங்கொருத்து அரசியலாகவே இவரது நிலை தொடர்கிறது. ஆனால் ஈரோஸ் கட்சியை வாங்குவதற்கு பலர் போட்டி.

## தமிழ் மக்கள் கூட்டமைப்பின் தலைவர் சி.வி.விக்னேஸ்வரன் :



இவர் முன்னாள் நீதியரசர். தமிழ் தேசிய கூட்டமைப்பினூடாக வட மாகாண முதலமைச்சரானார். திண்ட வீட்டுக்கே இரண்டகம் செய்தவர் என்று கூறப்படுகிறது. அரசியலில் போதிய அறிவு இல்லாவிட்டாலும் நீதித்துறையில் தலை சிறந்தவர். மோசடிகள் இவரிடம் இல்லை. குறித்த த.தே.கூட்டமைப்பு தன்னை ஏமாற்றுகிறது என்று கருதியே அக்கட்சியில் இருந்து விலகியவர். தலைமைத்துவத்தை எதிர்பார்ப்பவர். சுமந்திரனுக்கும் இவருக்கும் ஆகாது. ஏதோ ஒரு வகையில் தமிழ் மக்களுக்கான தீர்வினை பெற்றுக்கொடுக்க வேண்டும் என்று செயற்படுபவர்களில் இவரும் ஒருவர்.

## ஈ.பி.டி.பி கட்சியின்தலைவர் டக்ளஸ் தேவானந்தா :



இவர் மூத்த அரசியல்வாதி. ஒரு போராட்ட வீரன். மூன்று தசாப்தங்கள் பாராளுமன்ற அனுபவர் கொண்டவர். அவருக்கான வாக்கு வங்கியை என்றும் தக்கவைத்துக் கொள்பவர். தனது கொள்கையை என்றும் விட்டுக்கொடுக்காதவர். யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற கொலை கொள்ளை,கற்பழிப்பு, ஆட்கடத்தல் சம்பவங்களுடன் நேரடி தொடர்பில் உள்ளவர் என்று கூறப்படுகிறது. பல ஆதாரங்கள் இருந்தும் இவரை அரசாங்கத்தினால் ஒன்றும் செய்ய முடியவில்லை. மக்களுக்கு நிறைய வேலை வாய்ப்பையும் பெற்றுக்கொடுத்துள்ள ஒருவர். இவருடன் யார் மோதினாலும் சந்தர்ப்பம் பார்த்து பழி வாங்குவார். விடுதலைப்புலிகளை இவருக்கு பிடிக்காது அவர்களை என்றுமே எதிரியாகத் தான் பார்ப்பவர். இவர்களது கொள்கை மத்தியில் கூட்டாட்சி மாநிலத்தில் சுய ஆட்சி. தற்பொழுதும் அரசாங்கத்துடன் இணைந்து செயற்படுபவர்.

## சிறி ரெலோ கட்சியின் செயலாளர் நாயகம் உதயராசா :



இவர் டெலோவிலிருந்து பிரிந்து சென்றவர். மகிந்த ராஜபக்சவினுடைய தேவைகளுக்காக முன்பு பயன்படுத்தப்பட்டவர். தனது சொந்தப் பணத்தில் மக்களுக்கு கொடுப்பதில் சிறந்தவர். அரசியலில் இவருக்கு ஏமாற்றத் தெரியாது. எந்த தேர்தலையும் விட்டு வைக்காது போட்டி போடுபவர். சிலந்தியை போன்ற சுபாவம் கொண்டவர். ஆபத்தில் தனிநபர்களுக்கு உதவி செய்வதில் வல்லவர். இவர் மீதும் பல்வேறு குற்றச்சாட்டுக்கள் இருக்கிறது.

தமிழ் மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சிகளின் தலைவர்கள் இவ்வாறு செயற்படுவது மக்களுடைய, அரசியல்வாதிகளுடைய குற்றச்சாட்டாகும். இந்த நிலைமை மாற்றப்பட வேண்டும். அவ்வாறான நிலைமை மாற்றப்படாத வரையிலும் தமிழ் மக்களுக்கு விமோசனம் கிடையாது. ஆகவே தமிழ் தலைமைகள் ஒவ்வொருவரும் தங்களை தாங்களே சுய பரிசோதனை செய்துகொள்ள வேண்டும். தமிழ் தேசிய கூட்டமைப்பை பிளவுபடுத்தும் நடவடிக்கைகளை மேற்கொள்ளக்கூடாது. ஏதோ ஒரு வகையில் ஆயுத போராட்டத்தோடு தொடர்புடைய இவர்கள் தமிழ் மக்களுடைய போராட்டத்தின் வலி தெரிந்து செயற்பட வேண்டும். அவ்வாறு செயற்படுவதனூடாக தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வினை பெற்றுக்கொள்ள முடியும் எனலாம்.

இப்பத்திரிகை இலக்கம் 154A, தேக்கவத்தையில் அமைந்துள்ள தென்றல் அச்சகத்தில் அச்சிட்டு, தினப்புயல் நிறுவனத்தால் 24.05.2020 அன்று வெளியிடப்பட்டது.